A838

Prof. ... SAMY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்.

# மகோற்சவ சந்திரிகை.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

அச்சுவேலி

**பிரமஸ்ரீ: ச. குமாரசுவாமிக்குருக்கள்**

அவர்கள் செய்தது.

"ஈழகேசரி"ப் பத்திராதிபர்

**நா. பொன்னையா அவர்களால்**

பதிப்பிக்கப்பெற்றது.

தனலக்ஷ்மி புத்தகசாலை,

சுன்னாகம்.

**1932**

ிமை பதிவுசெய்யப்பட்டது.] [விலை சதம் 30.

10988.S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அச்சியந்திரசாலை,

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதிப்புரை

"மகோற்சவ சந்திரிகை" எனப் பெயரிய இந்நூல்; அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலைப் பரிபாலகரும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவரும், "சிவபூசை விளக்கம்" என்னும் நூலுக்கு ஆசிரியருமாகிய பிரமஸ்ரீ: ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களால், "ஈழகேசரி" ப் பத்திரிகை வாயிலாக "மகோற்சவம்" என்ற தலைப்பெயரோடு தொடர்பாக முன் வெளியிடப்பெற்றுள்ளது.

வெளியிடப்பட்ட இதனை அப்பத்திரிகையிலே படித்துணர்ந்த அன்பர்கள் பலர், இவ்வரிய விஷயம் புத்தகரூபமாக வெளிவரின் பலர்க்கும் பயன்றருமெனக் கூறினமையால், யானும் அவ்வாறே புத்தகரூபமாக வெளியிட விரும்பி ஷை குருக்களவர்களுக்குத் தெரிவித்தேன். குருக்களவர்கள் அதற்கிசைந்து முன்னையினும் இதனைத் திருத்தங்கள் செய்து தந்ததுடன் அச்சிடுவதற்குரிய செலவில் ஒரு பாகத்தையுங் கொடுத்துதவினர். குருக்களவர்களின் பெருந்தகைமை யாவராலும் பாராட்டப்படத்தக்கதே.

சைவசமயவளர்ச்சி குன்றியுள்ள இக்காலத்தில் இத்தகைய நூல்கள் வெளிவருதல் மிகவும் இன்றியமையாததாகும்.

"ஈழகேசரி" நிலையம்
சுன்னாகம்
ஆங்கீரச—ஆவணி

நா. பொன்னையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

# மகோற்சவ சந்திரிகை

## க. சிவபுண்ணியம்.

முற்பிறவிகளிற் செய்த புண்ணிய முதிர்ச்சியினால் இந்த அரிய மானுட யாக்கையைச் சிவபெருமான் நமக்குத் தந்தருளினார். ஆன்மா மற்றைய பிறவிகளை யொழித்து மானிடப்பிறவியை எடுத்தல், ஒருவன் சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரையேறுதல் போலாகும். மானுடராய்ப் பிறப்பினும், வேதாகம வழியொழுகும் புண்ணியபூமியிற் பிறத்தலரிது. அந்நாட்டிற் பிறப்பினும், சிவபெருமானிடத்து மெய்யன்புடையவர்களாய்ச் சைவசமயத்தை அனுட்டிக்குங் குடியிற் பிறக்கும் புண்ணியத்தைப் பெறுதல் மிகவுமரிது. சைவசமயத்தை அனுசரிக்கினும், சித்தாந்த உணர்ச்சியுடையவர்களாய்ச் சிவபெருமானைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளினும் நின்று, வழிபடுபவர்களே மலத்தினால் வருந் துன்ப மொழிந்து, முத்தியடைவார்கள்.

சரியை முதலிய நான்கு பதங்களும், தனித்தனி உபாயம், உண்மையென வேறுபாடுபெற்று இருதிறப்படும். புகழ் முதலியவற்றை விரும்பி, உலகப்பயனை நோக்கிச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாயச் சரியை முதல் நான்கும், மெய்யன்போடு முத்தி நோக்கமாகச் செய்யும் உண்மைச்சரியை முதல் நான்குமாகச் சிவபுண்ணியம் எட்டாகும். இன்னும் இவை ஒவ்வொன்றும் நந்நான்காகி, முப்பத்திரண்டாக விரிந்து பல திறப்படும். உபாயச்சரியை முதலியவற்றைச் செய்பவர்கள் ஸ்ரீகண்டபுவனம் வரையுமுள்ள புவனங்களை அடைந்து, அங்குள்ள போகங்களை அநுபவித்து மீட்டும் பூமியில் வந்து உயர்குடியிற் பிறந்து, சைவசித்தாந்த உணர்ச்சியுடையவர்களாய் உண்மைச் சரியை முதலியவற்றை அனுட்டிப்பார்கள். உண்மைச் சிவபுண்ணியத்தின் பயனாகிய முத்தி, பதமுத்தி, பரமுத்தி என இருவகைப்படும். பதமுத்தி, சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன. பரமுத்தி சாயுச்சியமாம்.

சரியையை அனுட்டித்தோர் அகத்தொண்டர்க்குரிய வுரிமையைப்போல, சிவபெருமான் திருமேனி கொண்டிருக்கும் உலகத்துள் எவ்விடத்துந் தடையின்றிச் சஞ்சரித்து, அவ்வுலகபோகங்களை அநுபவித்து வாழ்வர். கிரியையை அனுட்டித்தோர் புத்திரர்க்குரித்தாகிய உரிமை போலச், சிவபெருமானுக்குச் சமீபமாகவிருந்து, அப்போகங்களை அநுபவித்து வாழ்வர். யோகத்தை அனுட்டித்தோர் தோழர்க்குரித்தாகிய உரிமைபோலச் சிவபெருமான் கொண்டருளுந் திருமேனியைப் பெற்று வாழ்வர். ஞானத்தை அனுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக் கலந்து, நித்தியானந்தத்தை அநுபவித்து வாழ்தலாகிய பரமுத்தியடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தியாகிய பேரின்பச் சுவையை அநுபவித்தற்கு அரும்புபோல் விளங்குந் தாதமார்க்கமாகிய சரியையும், மலர்போல் விளங்கும் புத்திரமார்க்கமாகிய கிரியையும், காய்போல் விளங்கும் சகமார்க்கமாகிய யோகமும், கனிபோல் விளங்கும் சன்மார்க்கமாகிய ஞானமும் படிகளாக இருக்கின்றன. அரும்பில்லாமல் மலர் உண்டாகாதவாறு போலச் சரியையில்லார்க்குக் கிரியை பயன்கொடாது; மலரில்லாமற் காயுண்டாகாதவாறுபோலக் கிரியை செய்து அதனாற் சித்தியடையாதவருக்கு யோகம் பயன்கொடாது; காயில்லாமற் கனியுண்டாகாததுபோல, யோகமில்லாதவருக்கு ஞானம் பயன்கொடாது; கனியுண்ணாதவர் அதன் சுவையை அறியமாட்டாததுபோல, ஞானமில்லாதவருக்கு முத்தியின்பங் கைகூடாது.

தாயுமானசுவாமிகள்.

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

திருநாவுக்கரசுநாயனார்.

(தனித்திருக்குறுந்தொகை. திருமுறை ரு.)

"மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனித்தந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனென் னுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே."

சரியையிற் சரியையாவது: சிவபெருமான் வீற்றிருக்குந் திருக்கோயிலில் ஆசாரமுடையவர்களாய்ச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அந்தர்யாகபூசையாம். கிரியையில் ஞானமாவது: அந்தர்யாக பூசையினுறைப்பினல் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தலாம். கிரியையை அநுட்டித்து வர வர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினுல் அதி நுட்ப அறிவுடையவர்களாய், அருவத்திருமேனியே பொருள், உருவத்திருமேனியும், அருவுருவத்திருமேனியும், அதனை அறிதற்கிடமாகிய திருமேனிகளென்றறிந்து யோகத்தில் விருப்புடையவர்களாய் அகத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்.

யோகத்தில் சரியையாவது: இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்பன. இயமமாவது: கொல்லாமை, உண்மை கூறல், களவுசெய்யாமை, பிறர்பொருள் விரும்பாமை, இந்திரியங்களை விடயங்களிற் செல்லவிடாதடக்குதல் முதலாயின. நியமமாவது: தவம், சுத்தமுடைமை, தத்துவநூலாராய்தல், பெற்றது கொண்டுமகிழ்தல், தெய்வம் வழிபடல் முதலாயின. ஆசனமாவது: இருக்குமுறை. அது பலவகைப்படும். அவற்றுட் சுகாசனமுமொன்று. பிராணுயாமமாவது: பிராணவாயுவை அடக்குதல். அது மந்திரசெபத்துடன் அடக்குவதும் மந்திரசெபமின்றி அடக்குவதும் என இருவகைப்படும். யோகத்திற் கிரியையாவது: பிரத்தியாகாரம், தாரணை என்பன. பிரத்தியாகாரமாவது: மனத்தைப் புறத்திற் செல்லவொட்டாது அடக்குதல். தாரணையாவது: மனதைச் சுழுமுனைமார்க்கத்திற் செலுத்துதல். யோகத்தில் யோகமாவது: தியானமாகும். அது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறுதாரங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதேவதைகளையும் அறிந்து, மூர்த்தியின் சொரூபத்தை மனதால் பிரமரந்திரத்தில் தியானித்தலாம். யோகத்தில் ஞானமாவது: சமாதியாம். அது மூர்த்தியாகிய தோற்றமும், சிந்தித்தலாகிய தொழிலும், சிந்திக்கின்ற தானுமாகிய பேதங்களின்றி மூர்த்தியுந் தானும் இரண்டறக் கலந்து நிற்றலாம். இயமம் முதலிய எட்டும் வினைகள் கெடுதற்கு வழியாகிய அட்டாங்கயோகம் எனப்படும்.

சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் அனுட்டித்து வரவர உண்டாகும் பக்குவமுதிர்ச்சியினால் மெய்யறிவு விளங்கிச் சச்சிதானந்தவடிவாகிய ஒளிப் பிழம்பே பதியின் சொரூபம். உருவத்திருமேனி முதலிய மூன்றும் அதனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டுங் கொண்ட திருமேனிகளென்றறிந்து, காயத்தொழில், மனத்தொழில் என்னும் இரண்டையும் விட்டு, ஞானத்தில் விருப்புடையவர்களாய், அறிவுத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்.

ஞானத்திற் சரியையாவது: ஆசாரியரிடத்து ஞான சாஸ்திரங்களைக் கேட்டல். ஞானத்திற் கிரியையாவது: கேட்டவைகளைச் சிந்தித்தல். ஞானத்தில் யோகமாவது: தெளிதல். ஞானத்தில் ஞானமாவது: நிட்டைகூடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புறு கூதிர்க் காலை யைப்பசிப் பூரச் சாறு
முன்பனிப் பருவந் தன்னில் வைகறை முகிழ்த்த பூசை
பின்பனிப் பருவந் தன்னிற் பிறங்குபொன் னூசலாட்டு
மென்பன சிறப்பு மாண வியற்றுவோர் வீடு சேர்வார்.

(காஞ்சிப்புராணம்.)

உற்சவமென்பது: உத்தமயாகமெனவும், மேலான பஞ்சகிருத்தியமெனவும், போகமோக்ஷங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும். உற்சவம்; நித்தியோற்சவம், நைமித்திக உற்சவம், காமியஉற்சவம் என மூவகைப்படும். தினந்தோறும் நித்திய பூசாந்தத்திற் செய்வது நித்தியோற்சவமாம். வருடந்தோறும் குறித்த மாதத்தில் வரும் திதி, நக்ஷத்திரம், சங்கிராந்தி என்பவற்றுள் ஒன்றை அந்தமாகக் கொள்வது நைமித்திக உற்சவமாம். இஷ்டகாலத்திற் செய்வது காமியோற்சவமாம். நைமித்திய உற்சவம், காமியஉற்சவம் என்னும் இருவகை உற்சவங்களுக்கும் காலநியமம் கூறுமிடத்து; சௌரம், சாந்திரம், நக்ஷத்திரம், சாவனம் என நால்வகைப்படும்.

சௌரமாச உற்சவம் பிரசாவிருத்தியையும், சாந்திரமாச உற்சவம் முத்தியையும், நக்ஷத்திரமாச உற்சவம் பாவநிவாரணத்தையும், சாவனமாச உற்சவம் சாந்தியையுங் கொடுக்கும். சூரியன் ஒவ்வொரு ராசிகளிலுஞ் செல்லுங் காலம் சங்கிராந்தி எனப்படும். சங்கிரமம் பிராதக்காலம் முதல் எவ்வெக்காலத்திற் சம்பவிக்கின்றதோ அவ்வக்காலத்தையே தீர்த்தாந்தமாகக் கொள்வது சௌரமாத உற்சவமாம். வைகாசி மாதத்தில் சதுர்த்தசியையும், மாசியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஷ்டியையும், ஆனியில் கிருஷ்ணாட்டமியையும், பன்னிரு மாசங்களிலும் வரும் பௌர்ணிமையையும், அமாவாசையை யும் அந்தமாகக் கொள்வது சாந்திரமாத உற்சவமாம்.

மார்கழியில் திருவாதிரையையும், தையில் பூசத்தை யும், மாசியில் மகத்தையும், பங்குனியில் உத்தரத்தையும், சித்திரையிற் சித்திரையையும், வைகாசியில் விசாகத்தை யும், ஆனியில் மூலத்தையும், உத்தரத்தையும், ஆடியில் உத் தராடத்தையும், ஆவணியில் திருவோணத்தையும், புரட் டாதியில் பூரட்டாதியையும், ஐப்பசியில் அசுபதியையும், கார்த்திகையிற் கார்த்திகையையும், எல்லாமாதங்களிலும் திருவாதிரையையும் அந்தமாகக் கொள்வது நக்ஷத்திரமாத உற்சவமாம். ஒருமாதத்தில் ஒருநக்ஷத்திரம் இருமுறை வரின் பிந்தியதில் தீர்த்தோற்சவத்தைச் செய்க. இருமுறை பூரணை வரினும் பிந்தியதையே கொள்க. அரசனுடைய ஜென்மநக்ஷத்திரம், பட்டாபிஷேக தினம், யுத்தாரம்ப தினம், எசமானுடைய நக்ஷத்திரம், குருவினுடைய நக்ஷத் திரம், இலிங்கத்தாபன தினம் என்னு மிவற்றிலொன்றைத் தீர்த்தாந்தமாகக் கொள்வது சாவனோற்சவமாம்.

தீர்த்தோற்சவத்தைப் பூர்வான்னத்திற் கொள்வது உத்தமம், மத்தியான்னத்திற் கொள்வது மத்திமம், அதற்கு மேற்பட்டகாலங்களிற் கொள்வது அதமம். பூர் வான்னத்தில் உதயாதி மூன்றுநாழிகை உத்தமம். மூன்று நாழிகைக்குமேல் ஏழுநாழிகைவரையும் கொள்வது மத்தி மம். அதன்மேற் பத்துநாழிகைவரையுங் கொள்வது அத மம். இவை முறையே இராசதகாலம், சாத்துவிதகாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமததகாலம் எனப்படும். இராசதகாலம் சுப்பிரமணியருக்கும், சாத்துவிதகாலம் சிவபெருமானுக்கும் தாமததகாலம் மற்றைய மூர்த்தங்களுக்குமென்று விசயாகமத்திற் கூறப்பட்டது.

ஒவ்வொருதினங்களிலும் காலசந்தி உற்சவத்திற் செய்யும் ஓமம் பெலி முதலியவைகளை ஏழு நாழிகைக்குள்ளாகவும், சாயங்கால ஓமம் பெலி முதலியவைகளை இரவு ஏழு நாழிகைக்குள்ளாகவுங் கொள்வது உத்தமமாம். கோயிலதிகாரிகள் குரு லிங்க சங்கம பத்தி யுள்ளவர்களா யிருத்தல் வேண்டும். அவர்கள் வேதாகமஅறிவும், நல்லொழுக்கமும், ஈசுரபத்தியுமுடைய சிவாசாரியர்களை நியமித்து, காலாதீதத்திற் செய்யுங் கிரியைகள் பயன்படாவாகையால் காலந்தவருமல் சிரத்தையோடு கிரியைகளைச் செய்வித்தல் வேண்டும். கோச்செங்கட்சோழநாயனுர், திருவானைக்காவில் அமுதலிங்கேசுரருக்கு அருச்சகர்களாக அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாகும் சிவப்பிராமணர்களை நியமித்தனர். அவர்கள் அருச்சித்துவருநாளிலே, அரசரும் பணிகேட்ப, மற்றையவர்களும் எக்கருமஞ் செய்யினும் இன்றியமையாது நல்ல விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும் நன்மையுடைமையினுல், தம்மை மதித்துக் கெறுவங்கொண்டார்கள். ஞானதலத்தில் வாழ்தலினுலும், அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதினுலும், பெருமைகளெல்லாந் தமக்கு வந்தனவென்று கருதாமல் தவறுகள் பலவற்றைச் செய்தார்கள். மெய்யன்போடு பூசைபுரியாது கரவுடையவர்களாய் அச்சிவமறையோர் நடப்ப, "மனமுருகி நினையாதார்க்கு வஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்" என வாகீசப்பெருந்தகையார் கூறிப்போங்கு வஞ்சர்க்கு வஞ்சராகிய சிவபெருமான் திருவுள்ளங் கறுத்து, அவர்களை அழிப்பதற்குத் திருவுள்ளங்கொண்டிருந்தார். அந்தணர்கள் அமுதலிங்கேசுரருக்குப் பூசைசெய்வதற்காக ஒரு சிறுவனை வைத்து, விருப்பத்தோடு எல்லோரும் வெளிக்கொண்டு, கொள்ளிடத்தைக் கடப்பதற்கு மரக்கலத்திலேறினார்கள். சிவபெருமானுடைய திருவருளால் ஒரு சூறைக்காற்றுச் சென்றலைக்கக் கலங் கவிழ்ந்தது. சிவத்துவிசர்களும் மனைவியர்களும் பிள்ளைகளும் அனைவோரும் நீரில் வீழ்ந்து துன்பமடைந்து இறந்தார்கள். ஆழமாகிய நதியிற் செல்லாது எஞ்சிய சிறுவனைச் சிவபெருமான் தமது திருவருளுக்கு இலக்காக்கி, வேதம் முதலிய கலைகளை உபதேசித்துச் சிவபுண்ணியங்களைச் செய்யுமாறு வைத்தனர்.

குமாரக்கடவுள் திருக்கைலாசமலையினின்றும் சிவபெருமானுக்குப் பூசைசெய்வதற்குரியவரென்று திருப்பிடவூரில் சிவப்பிராமணர்களைக் கொண்டுவந்து தாபித்தனர். சிவபெருமான் அவர்களுள், சிலரை அழைத்துப் பூசை முதலியவற்றைச் செய்வதற்கு வைத்தனர். வினைத் தொடர்ச்சியற்ற அவ்வந்தணர்கள் ஆன்மநாயகராகிய சிவபெருமான் நல்வினை செய்பவர்களை அருளுந் தன்மையையும் தீவினைசெய்பவர்களைத் தண்டிக்குந் தன்மையையும் மனதில் நினைத்து நினைத்து அச்சமும் அன்பும் உள்ளவர்களாய், சிவபெருமான் மகிழும்படி பூசை முதலிய பணிகளை மூவுலகமும் வியக்கும்வண்ணஞ் செய்தார்கள். இச்சரித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம் திருவாலைக்காப்புராணம் அமுதலிங்கேச ருண்முறை செய்படலத்திற் காணப்பட்டது.

உற்சவம்: சாகல்யம், பாவனம், சாந்திகம், மாங்கல்யம் எனவும் நால்வகைப்படும். துவசாரோகணாதி தீர்த்தாந்தம் சாகல்யமாம். துவசாரோகணம் மாத்திரமின்றிச் செய்வது பாவனமாம். பெலியும் ஓமமுமின்றிப் பூர்வான்னத்திலாவது மற்றைக்காலத்திலாவது செய்வது சாந்திகமாம். எசமானும் குருவும் ஒருதினத்தை அந்தமாக நியமித்து, பிராதக்காலத்திற் செய்வது மாங்கல்யமுமாமெனச் சூட்சுமாகமம் செப்பும். துவசாரோகணாதி தீர்த்தாந்தமான சாகல்யோற்சவமே மேலானது. நைமித்திய காமிய உற்சவங்கள் ஒருநாள், மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பதின்மூன்றுநாள், பதினைந்துநாள் பதினேழுநாள் முதலிய பிரிவுகளையுடையன. ஏழுநாள் முதலாகிய உற்சவங்களுக்கே துவசாரோகணஞ் செய்க.

உற்சவாரம்பத்துக்குமுன் வாகனம் முதலிய உபகரணங்களையும், மண்டபம், கோபுரம், மதில் முதலியவைகளையும் புதுப்பித்து, "மெய்யெனும் விதானம் விரித்து" (திருக்கழுமல மும்மணிக்கோவை) சத்தியமென்னும் மேற்கட்டி கட்டி, மாவிலைத்தோரணம் புட்பமாலை, வாழை, இளநீர், கரும்பு, சிவபக்தியை வளர்க்கத்தக்க சித்திரப்பிரதிமை, கண்ணாடி, முதலியவைகளால் அலங்கரித்துச் சித்திரவஸ்திரங்கட்டிப், பலநிறக்கொடிகளை நிரைத்து, வீதிகளிலுள்ள முள் முதலியவைகளை அகற்றி, வீடுகளை அலகிட்டு மெழுகி பூர்ணகும்பங்களை நிரைத்து, பலதீபங்களை ஏற்றி மங்கலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களுடன் கூடிய சகல அலங்காரங்களையும் அமைத்து, நகரத்தையும் அலங்கரித்தல்வேண்டும். உற்சவாரம்பத்திற்கு முதனாள் சண்டேசுரரை அல்லது சமய குரவரிலொருவரை அலங்கரித்து வீதிசோதனார்த்தமாகப் பக்தோற்சவஞ் செய்க.

ஆசாரியரும், எசமானும், மற்றையோரும் அவரோகணம்வரை ஒருகாலப் போசனஞ் செய்து, தருப்பைப்பாயல் முதலியவற்றிற் சயனிக்க. தைலாப்பியங்கம், ஸ்திரீசம்போகம் முதலியவற்றை விடுக. அவரோகணம்வரை விவாகம் முதலிய சுபக்கிரியைகளும் பிரயாணமும் அக்கிராமத்திலுள்ளவர்கள் செய்தலாகாது. உற்சவம் நடைபெற்றுவரும் ஆலயங்களில் வருடந்தோறுங் குறித்தமாசத்தில் வரும் திதி அல்லது நக்ஷத்திரம் அல்லது சங்கிரமத்தில் உற்சவத்தைச் செய்யாவிடின், கோயில் அதிகாரிகளுக்குங் கிராமச் சனங்களுக்கும் க்ஷேமமுண்டாகாது. சிகரத்தாபனம் இல்லாத ஆலயங்களில் உற்சவம் செய்தலாகாது.

சுவாமி திருவுலாக் கொண்டருளும்போது, ஆசாரியர் சுவாமிக்கு வலப்பக்கத்திலும், எசமான் இடப்பக்கத்திலும், பக்தசனங்கள் பின்னாகவும் நமஸ்கரித்துந் தோத்திர பாராயணஞ் செய்துகொண்டும், சிவத்தொண்டு செய்பவர்கள் சுவாமிக்கு முன்பாகவும் இருமருங்குகளிலும் நின்று தத்தமக்குரிய சிவதொண்டுகளைச் செய்துகொண்டும் செல்லுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிப்புராணம்.

இத்தகு கடவுட் சாறு நோக்கியங் கிறைஞ்சு வோரு
மத்தகு விழவி னீற்றிற் றீர்த்தநீ ராடு வோரும்
பைத்தமாம் பல்குற் செவ்வாய்ப் பணிமொழி யொருபான்
வித்தகன் கயிலை நண்ணி விறற்கண நாத ராவார். [மேய

இயக்கர், இராக்கதர், பைசாசர், அவுணர் முதலியவர் களை நிக்கிரகித்தற்பொருட்டும், தேவர், மனிதர் முனிவர் முதலிய சிட்டர்களைப் பரிபாலித்தற்பொருட்டும் வாகனோற்சவம் செய்யப்படுவதாம். மூவுலகையும் இரட்சித்தல் காரணமாகச் சுவாமி வீதிப்பிரதக்ஷணம் செய்கின்றனர். சுவாமி திருவுலாக் கொண்டருளும்போதும், பூசை நடைபெறும் போதும் எழுந்துநின்று நமஸ்கரியாது அக்கிரியைகள் நடைபெறுமிடங்களில் இருப்பவர்கள் யாவரேயாயினும் ஒட்டகமாவார்கள். இதற்கு உதாரணமாக, சிவஞானசுவாமிகள் காஞ்சிப்புராணத்திற் கூறிய சரித்திரமொன்றைத் தருகின்றும். "சதசிருங்கம் என்னும் மலையின் ஒருபாங்கராகச் சனற்குமாரமுனிவர் யோகுசெய் திருக்குநா ளொருநாள், சிவபெருமான் உலகைக் காத்தளிக்கும்பொருட்டுக் கிருபை கொண்டு, இடபவாகனத்திலாரோகணித்துக் கணங்கள்சூழ விசும்பில் உலாவியருளினர். அதனைச் சனற்குமாரமுனிவர் யோகத்தில் வைத்த கருத்தினால் அறியாராய், இருக்கையினின்றும் எழும்பாதவராயினர். திருநந்திதேவர் முனிவரை நோக்கி வெகுண்டு, எம்பெருமானையிகழ்ந்திருந்ததனால் ஒட்டகமாகுதி என்று சபித்தனர்." உடனே முனிவர் ஒட்டகமாயினர். சிலகாலங் கழிய திருவருளினால் காஞ்சியை அடைந்து சிவனைப் பூசனைசெய்து சாபநீக்கம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பவி தீக்கை.

கர்ஷணாதிப்பிரதிட்டாந்தமான கிரியைகளைத் தான் தேடிய பொருளாலாவது, காயத்தின் முயற்சியாலாவது செய்வதனால், சமயதீக்ஷாபலன் உண்டாம். நித்தியக் கிரியைகளையும் காமியக்கிரியைகளையுஞ் செய்வதனால் விசேஷ தீக்ஷாபலன் உண்டாம். உற்சவஞ் செய்வதனால் அத்துவ சுத்திசகிதமான நிர்வாண தீக்ஷாபலனும், தீர்த்தோற்சவஞ் செய்வதனால் ஆசார்ய அபிடேகபலனும் உண்டாம். உற்சவம் சாம்பவிதீக்கை எனப்படும். சாம்பவிதீக்கையாவது திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தைச் சேதிக்கையாம். சாம்பவிதீக்கை எனினும் விஞ்ஞானதீக்கை எனினும் ஒக்கும். சிவபெருமான் சாம்பவிதீக்கையில் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியர், சிஷ்யர் என்னும் ஐந்திடங்களிலும் நின்று அருள்செய்வார். சாம்பவிதீக்கையாகிய உற்சவத்திலும் அங்ஙனமே ஐந்திடங்களில் நின்று அருள்செய்வர். அஸ்திரமூர்த்தி கும்பமாம்; பலிநாயகர் மண்டலமாம்; மகேஸ்வரர் சிவாக்கினியாம்; நியமமுள்ள உற்சவாசாரியரே குருவாம். தீக்ஷிதர்களும், அதீக்ஷிதர்களும், பக்தர்களும், சமயாசார லோபமுள்ளவர்களும் முதலிய எல்லாஆன்மாக்களும் சிஷ்யராவர். இன்னும் யாககும்பம், தம்பம், விம்பம் என்னுமிடங்களிலும் நின்று அருளுவர். ஆகையால், ஞானதீக்ஷாகாலமாகிய அரிய மகோற்சவகாலத்தில் சரியையாளர் முதலிய யாவருந் தவறாது தினந்தோறும் நித்தியகருமங்களை முடித்து, ஆசாரசீலராய் ஆலயத்திற் போய் தூலலிங்கமாகிய கோபுரத்தையும், சூக்குமலிங்க



1998 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிய சிவலிங்கத்தையும் வழிபட்டுப், பிரதக்ஷண நமஸ்காரங்களைச் செய்து இயன்ற சிவபுண்ணியங்களைச் செய்தல் வேண்டும். ஆலயத்தில் அமைந்திருக்கும் ஐந்து வீதிகளும் ஆன்மாவின் ஐந்து சரீரங்களைக் குறிப்பன. ஐந்து பிரகாரங்களையும் வலம்வருதலால், ஐந்து கோசங்களிலுந் தங்கியிருக்கும் பாவங்களுந் தேயும். பின்பு ஐந்து சரீரங்களும் நீங்கிச் சிவவியாபகம் ஆன்மாவில் உண்டாகும். மூன்று வீதிகளை வலம்வருதலால் முச்சரீர நீக்கமும், இரு வீதிகளை வலம்வருதலால் தூலம், சூக்குமம் என்னும் இரு சரீர நீக்கமும் உண்டாம். நமஸ்கரிப்பதனால் தற்போதம் நீங்கி, எண்குணம்விளங்கிச் சிவத்தோடு அத்துவிதம் உண்டாகும். சிவபுண்ணியங்கள் பொதுவுஞ் சிறப்புமென இரு வகைப்படும். சிவதீக்கை என்னும் அங்கமின்றிச் செய்வது பொதுச்சிவபுண்ணியமாம். சிவதீக்கையென்னும் அங்கத்துடன் செய்வது சிறப்புச் சிவபுண்ணியமாம். சிறப்புச் சிவபுண்ணியத்தை அடைவதற்குப் பொதுச் சிவபுண்ணியம் உதவியாயிருக்கும். சற்குருவையடைந்து முறைப்படி தீக்கை பெற்றவர்களுக்கு மல நீக்கமும் சிவஞானப்பேறும் உண்டாம்.

சன்னிதியிலுள்ள குப்பைகளை மெல்லிய துடைப்பத்தினலே திருவலகிடுபவர்கள் காமம், வெகுளி, மயக்கம், பொய் ஆகிய குப்பைகளை நீக்கிப் பரிசுத்தராய் விளங்குவார்கள். பட்டினத்தடிகள் "காமம் வெகுளி களிபெரும் பொய்யென்னுந்—தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை—பரிதினி லகழ்ந்து போக்கி" என்பதனல் அறிக. திருவிளக்கேற்றுபவர்களும், தீபங்களைத் தாங்குப

வர்களும், கண்ணாடி தாங்குபவர்களுஞ் சிவஞானத்தையடை வார்கள். தூபந் தாங்குவோர்கள் ஆணவமல சத்திகள் நீங் கப்பெறுவார்கள். சாமரையாற் பணிசெய்பவர்கள் மல நிவா ரணத்தையுந், திருவருட் செல்வத்தையும் அடைவார்கள். குடைபிடிப்பவர்கள் ஆஞ்ஞாசக்கரத்தையும், பெலத்தையும் அடைவார்கள். வாகனந் தாங்குபவர்கள் கணநாதராய்த் திருக்கைலாசத்தையடைந்து இன்புற்றிருப்பார்கள். கர்ப் பூரதீபந் தாங்குபவர்கள் அத்துவித முத்தியடைவார்கள். குருவை நமஸ்கரித்து விபூதி பெறுவது திருவருளைப்பெறு தலென்னுங் குறிப்பாகும்.

(திருநாவுக்கரசு சுவாமிகள். தி. ரு.)

குறைவி லோங்கொடு மாநுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் டோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவ னீழ்கழ லேத்தி யிருக்கவே.

இங்கே கூறிய தொண்டுகளையும், இவைபோன்ற ஏனைய தொண்டுகளையும் செய்வதற்கு மனங் கூசுவதும், மெய்யன்போடு செய்பவர்களைப் பார்த்து இகழ்வதும், இரு மூர்த்திகளுக்கூடாகச் செல்வதும், சேவிக்கவந்த பெண்க ளைத் தீண்டுவதும், அவர்களை இச்சித்துப் பார்ப்பதும், வீண்வார்த்தை பேசுவதும், சிரிப்பதும், வீண்கீதங்களைப் பாடுவதும், கேட்பதும், சுவாமி திருவுலாக்கொண்டருளும் போது, அங்கேயன்றி உள்ளேபோய் வணங்குவதும் குற்ற மாகும். சுவாமியை அலங்காரஞ்செய்பவர்கள் திரு ஆபர ணங்களாலும் ஆகமத்தில் உரியன என விதித்த புஷ்பங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாற் றெடுக்கப்பட்ட மாலைகளாலும், பட்டுவஸ்திரங்களா லும் ஆசாரசீலராய் அலங்கரிக்க, இக்காலத்திற் சிலர் இச் சிவபுண்ணியத்திற்கு மாறாகச் சில ஆலயங்களிலே, ஆகமங் களில் விதிக்கப்படாத புஷ்பங்களாலும், சீலைமாலை அழுக்கு வஸ்திரம் முதலியவைகளாலும் அலங்கரித்துக் கடவுளின் அருள்விளக்கத்தையுங் குன்றச்செய்து, தீவினைப்பயனுக்கு ஆளாகின்றனர். இவ்வக்கிரமமான செயல் அறவே ஒழியும் படி, கோயிலதிகாரிகளும் குருமாரும் சிரத்தை எடுப்பார்க ளாக.

கோயில்களில் துன்மார்க்கிகளாகிய தாசிகளை அழைத்து நடனஞ் செய்விப்பது பாவமாகும். உபயகாரரென்போர் அவர்களுக்குக் கொடுக்கும் அரியபொருளை அறிவும் நல் லொழுக்கமுமுடைய சமயபோதகர்களையும், ஓதுவார்களை யும் அழைத்துச் சற்பிரசங்கஞ் செய்வித்தும், வேதபாரா யணஞ் செய்வித்தும், அபிஷேகத் திரவியங்களைக் கிரம மாகத் தேடிக்கொடுத்து அபிஷேகஞ் செய்வித்தும், யாகத்துக்கு வேண்டிய நெய், சமித்து முதலிய உபகரணங் களைக் குறைதலின்றிக் கொடுத்தும், யாகதீபம் முதலிய தீபங்கள் இரவும் பகலும் அவியாதபடி பாதுகாத்தும் இவைபோன்ற பிறபுண்ணியங்களைச் செய்தும் சிவபத்தி வளரும்வழியிற் செலவுசெய்வது உத்தமோத்தமமாகும். இன்னுஞ் சிலர் வாணவிளையாட்டுக்கள் செய்து, அரிதிற் றேடிய பொருளை அற்பநேரத்தினுள் கரித்தும், புகைத் தும், எரித்தும் உற்சவத்துக்கு வரும் அடியார்களை அச்சப் படுத்தி உயிர்வதையும் புரிகின்றனர். அன்றியும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பற்றை நீக்கிச் சிவத்தியானஞ் செய்யுங்காலமாகிய அரிய உற்சவகாலத்தில் உடற்பற்று முதலியவற்றை உண்டுபண்ணி, பழிபாவங்களுக்கு ஆளாகின்றனர். அங்ஙனம் பழிபாவங்களுக்கு ஆளாகாது இவ்வரிய பொருளை மகேசுரபூசை, வறியவருக்கு அன்னமிடுதல், ஆலயத் திருப்பணி முதலிய சிவபுண்ணியங்களிற் செலவுசெய்தல் உத்தமோத்தமமாகும். இது பிறவுயிருந் தம்முயிரும் மோக்ஷமடையக்கூடிய நல்வழியாயிருக்குமே; இதனை அமர்நீதிநாயனார் மகோற்சவதரிசனத்துக்கு வந்த அடியார்களைத் திருவமுது செய்வித்துச் சிவலோகத்தை அடைந்த சரித்திரத்தாலும், கோச்செங்கட்சோழநாயனார் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்துச் சபாநாயகரது திருவடிநீழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்குணர்க.

சிவதருமோத்தரம்.

திருப்பதி வணங்கவென்று சென்றுறும் சிவநேசர்க்கு
மருத்தியாற் கங்கையாதி யாடிட நாடினர்க்கு
மருத்துக வன்னபான மவரவர்க் குபயோகங்கள்
பொருத்துக வூனைப்போக்கிச் சிவபுரம் புகுவர்தாமே.

சைவசமய நெறி.

திருப்பணி செய்வார்க்குச் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புட னீவார் பெறுக வீடு.

மெய்ப்பொருணாயனார் புகழ்ச்சோழநாயனார் முதலிய நாயன்மார்களும் தமிழ்வேந்தரிற் பலரும், பிறரும் வேதாகமவிதி தவறாது, சிவாலயங்களிலே நித்திய நைமித்தியங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் செய்வித்த புண்ணியப்பேற்றாலன்றோ, தாந்தாம் விரும்பிய பயன்களை எய்தி இன்புற்றார்கள்.

காஞ்சிப்புராணம்.

கல்வரைப் பிராட்டி செவ்வே லைங்கரன் கணங்கள் சூழப்
பல்வகை யூர்தி யும்பர்ப் படரொளி யரச வீதி
யெல்லையி லுயிர்கட்கெல்லா மெண்ணருங்கருணை பூத்துப்
புல்கொளித்திருவேகம்பன்றிருவுலாப்போதச்செய்வோர்
மேதகுதவந்தானங்கள்வேள்விகளனைத்துஞ்செய்தோர்க்
கோதிய பயத்திற் கோடி யுடையராய்க் கோடி கோடி
யேதமில் குலத்தி னோடு மெம்பிரா னுலகில் வாழ்ந்து
சாதலும் பிறப்பு மில்லாத் தத்துவந் தலைப்பட் டுய்வார்.

---

## ரு. உற்ஸவ பஞ்சகிருத்தியம்.

சிவபெருமான் பஞ்சகிருத்தியஞ் செய்வது ஆன்மாக்களது பக்குவ நோக்கி, பெத்தகாலத்துச் சுவர்க்காதி போகங்களையும் பதமுத்தியையுங் கொடுத்தற்பொருட்டும், முத்திகாலத்து மலங்களை அருளால் நீக்கி வீடு பேறு கொடுத்தற்பொருட்டுமாம். பஞ்சகிருத்தியமானது: சூக்கும பஞ்சகிருத்தியம், தூல பஞ்சகிருத்தியம், அதி சூக்குமபஞ்சகிருத்தியம் என மூத்திறப்படும். சூக்குமபஞ்சகிருத்தியம் கேவலாவத்தையில் நிகழும். சூக்கும அநுக்கிரகமாவது மலபரிபாகத்துக்குத் தக்கபடி அறிவிக்கத்தக்கவற்றை அறிவித்தல். திரோபவமாவது மறைக்கத்தக்கவற்றை மறைத்தல். சங்காரமாவது ஆன்மாக்களின் சஞ்சிதகன்மங்களைப் பக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வப்படுத்துதல். திதியாவது மாயாகாரியங்களை வெளிப்படத் தகுந்தவைகளாகச் செய்தல். சிருட்டியாவது தோன்றுதற்குரிய இயங்கும் பொருள்களையும் இயங்காப் பொருள்களையும் பார்த்துக்கொண்டிருத்தல்.

தூலசிருட்டியாவது ஆன்மாக்கள் செய்த கன்மங்களை நீக்குவதற்காகவும் மலபரிபாகம் உண்டாக்குவதற்காகவும் தநு கரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்தல். திதியாவது அவரவர் செய்த கன்மங்களை அவரவர் புசித்துமுடியும்வரையும் உண்டாக்கப்பட்ட தநு முதலியவற்றைக் காத்தல். சங்காரமாவது ஆன்மாக்கள் பிறந்திறந்து, வினைப்பயன்களை அநுபவித்தலாலாய இளைப்பு நீங்குவதற்காகத் தநு முதலியவற்றை முதற்காரணத்திலொடுக்குதல். திரோபவமாவது அநுபவிக்கவேண்டியவினையின் பயனை முறைப்படி அநுபவிக்கச் செய்து மலத்தைத் தேய்த்தல். அநுக்கிரகமாவது மலத்தினின்று விடுவித்து, நித்திய நிரதிசயாநந்தத்தைக் கொடுத்தல்.

அதிசூக்குமசிருட்டியாவது ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை உணர்த்துதல். திதியாவது உணர்ந்த சிவஞானத்தில் அழுந்தச் செய்தல். சங்காரமாவது பாசத்திலிருந்து பிரித்தல். திரோபவமாவது சிவஞானத்தை அறியுஞ் சமயத்தில் முன் பிரிக்கப்பட்ட பாச ஞானத்திற் செல்லவொட்டாது மறைத்தல். அநுக்கிரகமாவது சிவஞானத்தையனுபவிக்கச் செய்தலாம்.

உற்சவகாலத்திற் செய்யப்படும் வாஸ்து சாந்தி முதலிய ஒவ்வொரு கிரியையும், சிருட்டி முதலிய ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருத்தியத்தைக் குறிப்பதால், அக்கிரியைகளொவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடு அருளுதற்காக வைக்கப்பட்டனவென அறிக. வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், பேரீ தாடனம், இரட்சாபந்தனம், விருஷபயாகம், அஸ்திரதேவதாவாகனம், துவசாரோகணம், துவசபீடபலி, சந்தியாவாகனம், கிராமப்பிரதக்கிணம், கோபுரத்துவார நீராசநம், யாக மண்டபபூசை, பிரமத்தானத்திலும் எட்டுத்திக்கிலும் போடும் பெலி, திருக்கல்யாணம் என்பன சிருட்டியைக் குறிக்கும். வாகனோற்சவம், ஓமகருமம் பெலி என்பன திதியைக் குறிக்கும். கிருஷ்ணகந்தார்ச்சனை, மிருக யாத்திரை, இரதாரோகணம் என்பன சங்காரத்தைக் குறிக்கும். சூர்ணோற்சவம், தீர்த்தம், அங்குரவிசர்ச்சனம், யாக கும்பாபிஷேகம், அவரோகணம், விதிப்படி செய்யும் மௌனோற்சவம், இராட்சாபந்தனவிசர்ச்சனம், சண்டயாகம் என்பன திரோபவத்தைக் குறிக்கும். சத்தியாத்திரை அல்லது ஊடல், சண்டேஸ்வரோற்சவம், ஆசார்யோற்சவம் எனபன அநுக்கிரகத்தைக் குறிக்கும். இவற்றை மகோற்சவவிதியிற் காண்க.

## வாஸ்துசாந்தி.

வாஸ்துவினுற்பத்தி அந்தகாசுர யுத்தத்தில் அரன்கோபத்தினுல் உண்டானதாகச் சித்தாந்த சாரவளி வியாக்கியானத்திற் கூறப்பட்டுள்ளது. அந்தகாசுரயுத்தத்தில், சிவபெருமானிடத் துண்டானகோபத்தினுல் அவர் நெற்றியிலிருந்து வியர்வை பூமியில் விழுந்தது. அதிலிருந்து பூதமொன்று உண்டாயிற்று. அது சிவாஞ்ஞையினுல் பூமியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த அந்தகாசுரனுடைய இரத்தத்தைப் பானம்பண்ணித் திருப்தியடைந்து, பின் சிவபெருமானைக் குறித்துத் தவம்புரிய, அவர் சந்தோஷித்துப் பூதமாய்வந்த அவ்வசுரனுக்கு விரும்பிய வரங்களைக்கொடுத்தார். அவன் தனது வல்லமையினாலே மூவுலகையு மடக்கினான். தேவர்கள் பயந்து ஸ்ரீகண்டபரமேஸ்வரனைச் சரணடைந்தார்கள். கருணாநிதியாகிய பரமசிவன் தேவர்களை இரட்சித்தல் காரணமாக அதிபலர் என்னும் உருத்திரரையும், மாயாபாசங்களையுஞ் சிருஷ்டித்தார். அதிபல உருத்திரர் எட்டுப் பாசங்களினாலும் அவனைக் கட்டிப் பூமியிற்றள்ளி, பிரமாதிதேவர்களை அவன் தேசத்தில் வசிக்கும்படி செய்தார். சிவாஞ்ஞையினாலே தேவர்களால் அதிட்டிக்கப்பட்ட வாஸ்துபுருடனானவன் பிரமதேவருடைய பகற்காலம்வரையிற் சயனிக்கின்றான்.

ஈசானத்திற் சிரசும், நிருதியிற் பாதமும், மார்பிலஞ்சலியும், அதோமுகமும், கோப வடிவமுமாகத் திரவாஸ்து சயனிப்பன். இன்னும் கன்னிமுதல் மூன்றுமாசம் கிழக்கே சிரசாகவும், தநுமுதல் மூன்றுமாசம் தெற்கே சிரசாகவும், மீனமுதல் மூன்றுமாசம் மேற்கே சிரசாகவும், மற்றைய மூன்றுமாசம் வடக்கே சிரசாகவும் சலவாஸ்து சயனிப்பன். பூசாகாலத்தில் ஊர்த்துவமுகமாகவும், மற்றைய காலங்களில் அதோமுகமாகவும் சயனிப்பன்.

இன்னும், கன்னிமுதல் மூன்றுமாசம் தெற்கே சிரசாகவும், மீனமுதல் மூன்றுமாசம் மேற்கே சிரசாகவும், மற்றைய மூன்றுமாசம் வடக்கே சிரசாகவும் சலவாஸ்து சயனிப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாகாலத்தில் ஊர்த்துவமுகமாகவும், மற்றையகாலங்களில் அதோ முகமாகவும் சயனிப்பன்.

இங்கே கூறிய விதமேயன்றி வாஸ்து சுக்கிரகோபத்தினுல் யாகாபகாரியாக உண்டானுன் என்றும், இந்திரனுல் வெட்டுண்ட மலைகளின் சிறகுகளது பாரத்தைப் பூமியுஞ் சர்ப்பங்களுஞ் சுமக்கமாட்டாது மூச்சுவிட வெளியேவந்த விஷத்திலிருந்து உண்டானுன் என்றும், இன்னும் வேறு விதமாகவும் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. அவற்றைக் கற்பபேதமெனக் கொள்க.

தொடங்கிய கிரியையும், மந்திரமும், இடமும் சுத்தியாதற்பொருட்டு வாஸ்துசாந்தி செய்க. வாஸ்து பூசை செய்யாதொழியின் தொடங்கிய கிரியை பயன்கொடாது. பலாசு, அத்தி, அரசு என்பவற்றின் சிறுசாகை, இலை, தருப்பை என்பவைகளால் புருஷாகிருதியாகக் கட்டி, குண்டாக்கினியில் சுவாலிக்கச் செய்து, வீதி யாகம் முதலிய இடங்களிற் பாயக்கினிகரணஞ்செய்து ஈசான திக்கிற் போடுக. வாஸ்துவுக்குப் பாபரூபம் என்றும் பரியாயநாமம் உண்டு.

## மிருத்சங்கிரகணம்.

புண்ணியதீர்த்த சமீபத்திலும், நந்தனவனத்திலும், சமுத்திரக்கரையிலும், யக்ஞவிருட்சத்தினடி முதலியவிடங்களிலும், மிருத்சங்கிரகணம் செய்யலாம். அன்றியும் ஆலயத்தின் ஈசானத்திற்செய்வது ஆயுள்விருத்தியையும், அக்கினிதிக்கிற் செய்வது புத்திரவிருத்தியையும், மேற்கிற் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது மோட்ச சித்தியையும், வாயுவிற் செய்வது சம்பத்தை யும், உத்தரத்திற் செய்வது செல்வத்தையும் கொடுக்கும். கிழக்கிலும் நிருதியிலும் செய்யிற் கலகமும், தெற்கிற் செய் யில் அஞ்ஞானமும் உண்டாம்.

நவகோட்டங் கற்பித்துப் பூசித்து, அதில் பூமியை நிருதியிற் சிரசும், ஈசானத்திற் பாதமும், அக்கினி திசையில் வலக்கையும், வாயுவில் இடக்கையும் உடையதாகவும், தொடை, கடி, இருதயம் என்னுமிவற்றோடு கூடினதாகவும் பாவித்து, அதன் வயிற்றினிடத்திருந்து மண்ணை எடுத்தல் வேண்டும். நெற்றியிலெடுத்தால் இடத்துக்கும், முகத்தி லெடுத்தால் பிராமணருக்கும், கழுத்தில் எடுத்தால் ஆசாரி யருக்கும், புயத்தில் எடுத்தால் க்ஷத்திரியருக்கும், ஸ்தனத் தில் கிரகித்தால் பெண்களுக்கும், மார்பில் கிரகித்தால் புத் திரருக்கும், தொடையில் எடுத்தால் வைசியருக்கும், பாதத் தில் எடுத்தால் சூத்திரருக்கும் அழிவு உண்டாம்.

## அங்குரார்ப்பணம்.

வித்துக்களுக்கு அதிபன் சந்திரன் ஆகையால் இரவில் அங்குரார்ப்பணஞ் செய்தல்வேண்டும். பகற்காலத்திற் செய்தல்கூடாது. செய்யில் பயிர்கள் விருத்தியடையா. மனிதர்களுடைய சௌளம் முதலிய கிரியைகளை இரவை நீக்கிப் பகலிற் செய்யின் சகலசோபனமுண்டாம். தேவர்க ளுக்குப் பகற்காலத்தை நீக்கி இரவிற் செய்க. உடன் அங்கு ரார்ப்பணஞ் செய்யின் இரவிலாவது பகலிலாவது செய்ய லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரவன்காண் பாரதனிற் பயிரா னான்காண்
பயிர்வளர்க்குந் துளியவன்காண் டுளியி னின்ற
நீரவன்கா ணீர்சடைமே னிகழ்வித் தான்கா
ணிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபட் டேத்துஞ்
சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் றானே.

(திருநாவுக்-திருமுறை, சு.)

## பேரீதாடனம்.

குரு மும்முறை பேரீதாடனஞ் செய்க. முதற்றாடனத்தினால் பூமி, அந்தரிக்ஷம், சுவர்க்கம், பாதாளம் என்னுமிடங்களில் வசிக்கிறவர்களுக்கு இதமும், தேவவிரோதிகளாகிய அசுரர் முதலியோருக்கு அழிவும் உண்டாம். இரண்டாவது தாடனத்தினால் பிரமா, விட்டுணு, உருத்திரன், இந்திரன் முதலிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மிருகம் பட்சிகளுக்கும் இதமுண்டாம். மூன்றாவது தாடனத்தினால் எல்லாஉலகங்களுக்கும் பிராணிகளுக்கும் இதமும் சுகமுமுண்டாம்.

## இரட்சாபந்தனம்.

ர—எல்லா, க்ஷ—பாபநாசம். எனவே ரக்ஷா என்பது எல்லாப்பாவங்களையும் நீக்கும் எனப் பொருள்படும். மூர்த்திகும்பந் தாபித்து, ஓமகருமஞ் செய்து, சம்பாதாகுதி பண்ணி, மூர்த்திகும்பத்தை மூர்த்தியிலாவாகித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சாபந்தனஞ் செய்வது உத்தமம். ஓமமும் கும்பமு மின்றிச் செய்வது மத்திமம். தொடங்கிய கிரியையும் கரும முஞ் சித்தியாதற்பொருட்டு ஆசாரியர் ரக்ஷாபந்தனஞ் செய்க. அன்னையானவள் ஔஷதத்தை உண்டு, தனது பிள்ளைகளின் நோயை நீக்கிப் பாதுகாத்தல்போலத் தமது புத்திரர்களாகிய ஆன்மாக்களது மலநோயை நீக்கி இரட் சித்தல் காரணமாகச் சுவாமிக்கு இரட்சாபந்தனஞ் சாத்தப் படுகின்றது.

முடிவில் இரட்சாசூத்திரத்தை நீக்கி, அதனைச் சுழு கோதகத்துடன் சிவனுடைய வரதகரத்தில் நிவேதிக்க.

## யாகம்.

யாகசாலை எங்கும் சாந்தியதீதகலாசொரூபம்; கால்கள் பதாத்துவா; மண்டபத்தின் நடுவர்ணாத்துவா; கும்பங்கள் மந்திராத்துவா; ஓமத்திரவியங்கள் தத்துவாத்துவா; மண் டபமமைத்திருக்குமிடம் புவனாத்துவா; மண்டபத்துள்ள நான்கு வாயில்களும் நிவிர்த்தி முதல் சாந்திவரையுள்ள கலாத்துவா; இவ்வாறுகவின் மண்டபம் ஆறத்துவாவின் சொரூபமென் றறிந்துகொள்க.

பிரம விஷ்ணு ருத்திரன் என்பவர்களும், இந்திரன் முதலிய உலகபாலகர்களும், அசுத்த மாயாபுவனங்களில் இருப்பவரும், சுத்தவித்தையில் இருப்பவருமென இரு திறப்படுவர். அசுத்த மாயாபுவனங்களில் இருப்பவரது சரீரம் பிரகிருதி சம்பந்தம் ஆகலானும், முன் பரமசிவன் அநுக்கிரகம் இல்லாமையானும், அவர்களது தானம் பசுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் ஆகலானும், "யாகத்திற் பூசிப்பவர்கள் அசுத்த தத்துவம் முப்பத்தொன்றையும் மனசாற் கடந்து, சுத்த வித்தியாமயமான யாகசாலையை அடைந்து பூசித்து வணங்குவதினாலும்" அவர்கள் சுத்த வித்தியாமயமான இடத்தில் பூசிக்கப்படத்தக்கவரல்லர்.

சுத்த வித்தியாதத்துவத்தில் சத்தகோடி மகாமந்திரங்களும், வைகரிவடிவாயிருக்கும் காமிகம் முதலிய ஐம்பத்தொரு அக்கரங்களும், சித்தாந்த சாத்திரத்தால் பூசிக்கப்படாநின்ற நந்தி முதலிய கணநாதர் எண்மரும், இந்திரன் முதலிய உலகபாலகரும், வச்சிர முதலிய இவர்கள் ஆயுதமுமிருக்கும். மகேசுர தத்துவத்தில் அநந்தாதி எண்மர் இருப்பர். சத்திதத்துவத்தில் நிவிர்த்தி முதலிய கலைகளிருக்கும்.

சுத்தவித்தை முதலிய தத்துவங்களில் இருப்பவரது சரீரம் வைந்தவமாகலானும், மலபரிபாகத்தாற் பரமசிவன் அருளாற் பதம்பெற்றவராகலானும், பிறப்பிறப்புக்களை நீங்கி ஆண்டு நின்றபடியே சிவதரிசனத்தால் ஆனந்தவிளக்கத்தை அடைபவராகலானும், இவர்களே நித்திய நைமித்தியங்களிற் செய்யும் யாகாதி கன்மங்களிற் பூசிக்கப்படும் பெருமைபெற்றவர்களாவர்.

யாகசாலையிலே வைக்கப்படுங் கும்பத்திலாவாகிக்கும் சிவபெருமானுக்குக் குடம் மாமிசமாகவும், மேலே பூசப்பட்ட மண் இரத்தமாகவும், உள்ளேயிருக்குந் தண்ணீர் மேதஸ் ஆகவும் சுற்றியிருக்கும் நூல் எழுபத்தீராயிரம் நாடிகளாகவும், உள்ளேபோடப்பட்ட இரத்தினங்கள் முதலியன சுக்கிலமாகவும், வஸ்திரந் தோலாகவும், மாவிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையாகவும், தேங்காய் சிரசாகவும், கூர்ச்சஞ் சிகையாக வும், செபிக்கும் மந்திரம் பிராணனாகவும் அமைந்துள்ளன.

பிருதிவிதத்துவம் கூர்மாசனமும், உபவேதிகை அநந் தாசனமும், மகாவேதிகை சிம்ஹாசனமும், நெல் யோகா சனமும், அரிசி பதுமாசனமும், எள்ளு விமலாசனமும், நென்மலர் சத்தியாசனமுமாகப் பிருதிவிமுதற் குடிலையீறா கிய முப்பத்தாறு தத்துவங்களும் ஆசனமாக அமைந்துள் ளன.

நெல் தாமரை நாளத்து முட்களாகவும், அரிசி தாமரை இதழ்களாகவும், பயறு தாமரைப்பொகுட்டாகவும், உழுந்து தாமரைக் கொட்டையாகவும், எள்ளு கேசரங்களாகவும் பாவிக்கப்படுகின்றன.

யாகசாலையிலுள்ள சிவாக்கினியில் ஆகுதிசெய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அநுபவத்துக்கு வர வொட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும். உமி முதலிய வற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சுத்தமான நென்மல ரைச் சுவாமிக்கு ஆசாரியர் சமர்ப்பிப்பது மலநீங்கிய ஆன் மாக்களைச் சிவத்தோடு சேர்க்கும் பாவனையாகும்.

துவசாரோகணம் மும்மலத்திலே மூழ்கிக்கிடக்கின்ற ஆன்மா தீக்ஷாக்கிரமத்தினாலே பாசங்களை விட்டுச் சிவ ஞானத்தைப் பொருந்திப் பதியின் திருவடியை யடையும் முறைமையைக் காட்டும். எங்ஙனமெனில்: கொடிமரம் பதி யாகிய சிவபெருமானையும், கொடியேற்றும் கயிறு திரு வருட்சத்தியையும், கொடிச்சீலை பசுவையும், தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா பாசத்தினின்று நீங்கிச் சிவபெருமானை யடையு மிடத்து, திருவருட்சத்திவாயிலாகவே அடைதல் வேண்டும். இவ்விதமே கொடியேற்றத்திலும், பசுவைக் குறிக்கும் கொடிச்சீலை திருவருளைக் குறிக்கும் கயிறுவழியாகச் சென்று, தம்பத்தில் ஆருதாரத்தை ஆசனமாகக்கொண்டு அதன்மீதிருக்கும் பரமசிவத்தை அடைதலேயாம்.

தம்பமும் சீலையும் பொருட்டன்மையால் இரண்டா யிருப்பினும், தம்பமே பொருளாகச் சீலை அதிலே ஒடுங்கித் தங்கியிருத்தல் அத்துவித நிலையைக் குறிக்கும். இவ்வுண் மையை,

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடி [லொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே."

எனவரூஉம் உமாபதிசிவாசாரியர் திருவாக்கால் நன்குணர்க.

துவசத்தம்பம் பதியெழுத்தையும், கொடியேற்றுங் கயிறு பரை எழுத்தையும், கொடிச்சீலையி லெழுதப்பட்ட இடபதேவர் உயிரெழுத்தையும் கொடிச்சீலை திரோத எழுத்தையும் தருப்பைக்கயிறு மல எழுத்தையும் குறிக்கும்.

கொடிக்கவி.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்திணையுங்
கூசாமற் காட்டக் கொடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ வடிவமாகிய தம்பத்துக்குத் தம்பநுதி மகுடம் எனவும், யஷ்டிகை முகமெனவும், கயிறுகரமெனவும், கூர்ச்சம் வெண்மைநிறமுள்ள சடை எனவும், படம் தோல் எனவும், பீடம் முகமெனவும் அறியவேண்டும் என உத்தரகாரணம் செப்புகின்றது.

## மிருக யாத்திரை.

இதனை வேட்டைத் திருவிழா எனவும் சங்கார யாத்திரை எனவும் கூறுவர். பன்றி போன்ற ஆணவ மலமும், மான் போன்ற கன்ம மலமும், பட்சி போன்ற மாயா மலமும் ஆகிய மும்மலங்களும் ஆன்மாவைச் சார்ந்துநின்று வருத்துந் துட்டர்களாம். அஞ்ஞானத்தை யுண்டுபண்ணுகின்ற மும்மலங்களையு மடக்கிச் சாயுச்சியத்தைக் கொடுக்குங் குறிப்பாகவே இவ்வுற்சவம் நடைபெறுவதாம். இதனை எட்டாந்தினத்திற் செய்க.

## கிருஷ்ணகந்தம்.

திரிபுரசங்கார உண்மையை உணர்த்தும் பொருட்டுக் கிருஷ்ணகந்தம் சாத்தப்படுவதாம். அதனால் மாயாமலச் சட்டை நீங்கும். ஆதலால் ஆன்மாக்களை இரட்சித்தல் காரணமாக ஒன்பதாந்தினத்திற் செய்க.

## இரதோற்சவம்.

பரமபதியாகிய சிவபெருமான் சூரியசந்திரர் உருள்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், மற்றைச் சரம் அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும் அமைக்கப்பட்ட தேரில், மேருவை வில்லாகவும், விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுவை அம்பாகவுங் கொண்டு எழுந்தருளிப் பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத்த முப்புரத் தசுரர்களையுஞ் சிரித்தெரித்தருளினர்.

திரிபுரசம்மாரத்து உண்மைக்காட்சியை உணர்த்தி, ஆணவாதி மும்மலங்களையுங் கெடுத்தற்காக, இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

(திருவானைக்காப்புராணம்.)

புரமடுநாட்—சான்றநிலத் தேர்பொரு
மணித்தேர் சங்கத் தலைவ ருருட்டினர்.

(சுந்தரமூர்த்தி—திருமுறை எ.)

புரிசைமூன்றையும்பொன்றக்குன்றவிலேந்திவேதப்புரவித்தேர்
திரிசெய் நான்மறை யோர்சிறந் தேத்துந் திருமிழலைப் [மிசைத்
பரிசினாலடிபோற்றும்பத்தர்கள்பாடியாடப்பரிந்துநல்கினீர்
அரியவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே.

## சூர்ணோற்சவம்.

தநு கரண புவன போகங்கள் நான் எனது என்னுஞ் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சத்தியால் இடித்து, சுத்தசூரணமாக்கிச், சிவபெருமானிடத்தில் ஒப்பிக்க, அவர் அதி சூக்குமதிரோபவ கிருத்தியத்தைச் செய்வர். அப்பொழுது ஆன்மா இருவகைப்பற்றுக்களையும் வெறுத்துத் தன் செயலற்றுச் சிவன்செயலாய் நிற்கும்.

திருப்பெருந்துறைப்புராணம்.

“சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கடனை
யத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
யொத்ததிருச் சுண்ணம்......”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்த்தோற்சவம்.

ஆறு, குளம், சமுத்திரம் முதலிய இடங்களுக்குக் கடவுள் திருவுலாக்கொண்டு எழுந்தருளுவது அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் குறிப்பாகும். எண்வகை மூர்த்திகளுள் பவனென்னுந் திருநாமத்தையுடைய சிவபெருமானது வல்லமையாகிய சியேட்டை சவரூபமாயமைந்து, தன்னையடைந்து தரிசித்து ஆசமித்து, ஸ்நானஞ் செய்யும் அடியார்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து, தத்துவாதீதராய் விளங்குஞ் சிவத்துடன் கூட்டும்.

ஸ்நானஞ் செய்யும் அடியார்கள் ஆசாரியரால் சகல தீர்த்தங்களையுஞ் சங்கிரகிக்கப்பட்டதாகிய திருவருளென்னுந் தீர்த்தத்தையடைந்து, சரீரத்தேயுள்ள அசுத்தவாயுவைக் கழித்து, புறத்தேயுள்ள சுத்தவாயுவைப் பூரித்து, பெருவிரல்களாற் காதுகளையும், சுட்டுவிரல்களாற் கண்களையும், நடுவிரல்களால் மூக்கையும், மற்றைய விரல்களால் வாயையும் மூடிப் பிராணவாயுவைக் கும்பித்துப், பிரமரந்திரத்திலிருக்குஞ் சந்திரமண்டலத்தை இளகச் செய்து, அதிலிருந்து பெருகும் அமிர்தத்தினாலும், தீர்த்தத்தினாலும் ஸ்நானஞ் செய்து, மெய்யன்போடு சிவத்தலங்களையும் வழிபடின் பிறவிக்கு வித்தாகிய மும்மலங்களும் நீங்கிச் சிவானந்த முத்தியடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுநாயனார் திருத்தாண்டகம்.

திருமுறை ௬.

இயல்பாயவீசனை யெந்தைதந்தை
யென்சிந்தைமேவியுறைகின்றானை
முயல்வானைமூர்த்தியைத்தீர்த்தமான
திரியம்பகன்றிரிசூலத்தன்னகையன்
கயல்பாயுங்கடல்சூழ்வுண்டவேலிக்
கழிப்பாலைமேயகபாலப்பனார்
மயலாயமாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

[பண்சீகாமரம்—திருமுறை உ.]

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோளுமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையாரவர் தம்மைத் தோயாவாந்தீவினையே.

திரு ஊஞ்சல்.

சிவபெருமான் திருவருட் சத்திவடி வமைந்த ஊஞ்சலின் மீதிருந்தாடுதல், ஆன்மாக்களது குற்றங்களையலைத்துப், பிறவித் துன்பங்களையும், பிறவிக்குக் காரணமாகிய பாசங்களையுஞ் சேதித்து, ஆன்மாவை அடிமைக்கொண்டு, திருவருள் வாயிலாகத் தம்முடன் கூட்டுதலாம்.

திருப்பெருந்துறைப் புராணம்:— அருட்-சத்தியிருந் தாடத்தாலாட்டடற் பொன்னூசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம்.

மாதொருபாகத்தனுத்தரகோசமங்கைத்
தாதாடுகொன்றைச்சடையானடியாருள்
கோதாட்டிநாயேனையாட்கொண்டென்றொல்பிறவித்
தீதோடாவண்ணந்திகழப்பிறப்பறுப்பான்
காதாடுகுண்டலங்கள்பாடிக்கசிந்தன்பால்
போதாடுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

மௌனோற்சவம்.

மௌனமானது வாக்குமோனம், கரணமோனம், காட்டமோனம், சுழுத்திமோனம் என நான்குவகைப்படும். அவற்றுள், வாக்குமோனமாவது வாய்பேசாதிருத்தல்; கரணமோனமாவது காது முதலிய இந்திரியங்கள் ஒருவழிப்பட்டு அடங்கியிருத்தல்; காட்டமோனமாவது சரீரம் அசையாதிருத்தல். இம்மூன்றுமோனங்களிலும் மனம் ஒன்றைப் பற்றி நிற்குமேயன்றிச் சும்மா இருக்கமாட்டாது. இங்கே கூறப்பட்ட மூன்று மோனங்கள் வரம்புக்குட்பட்டவைகள். அவைகளால் பசுஞானமும், பாசஞானமுமுண்டாம். மோனமென்பது சும்மா இருத்தல். அது சுழுத்திமோனத்தாற் சித்திக்கும். சுழுத்திமோனமாவது உலகத்திலே உள்ள எல்லாப் பொருள்களும் சிவப்பொருளின்றித் தனித்து நில்லா; ஆகையால் அந்தச் சிவம் மற்றெல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிற்பதை அறிந்து, எல்லாப் பொருள்களுஞ் சிவமெனக்கண்டு, கண்டோமென்னும் போதமு நீங்கி நிற்கும் ஞானநிட்டையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மோனமென்பது ஞானவரம்பு" என ஔவைத் தாயாரும். "ஆனந்தமானநின்னையன்றியொன்றையுன்னாத மோனந்தமியேற்குமுத்திபராபரமே." எனத் தாயுமான சுவாமிகளும் கூறியருளுவது காண்க.

இஞ்ஞான நிட்டையை ஆன்மா அடைதல் வேண்டுமென்னுங் குறிப்பாகவே மௌனோற்சவம் செய்யப்படுகின்றது.

## பத்துநாள் உற்சவம்.

மகோற்சவநாள் பத்தினுள், முதனாள் விழாத் தூல நீக்குதற்பொருட்டும், இரண்டாநாள் விழாத் தூலசூக்கும நீக்குதற்பொருட்டும், மூன்றாநாள் விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மலமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற்பொருட்டும், நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத்தோற்றமும் நீக்குதற்பொருட்டும், ஐந்தாநாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்துமலமும் நீக்குதற்பொருட்டும், ஆறாநாள் விழா காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற்பொருட்டும், ஏழாநாள் விழா எழுவகைப்பிறப்பும், கலாதியேழும், மாயாமலகுணம் ஏழும் நீக்குதற்பொருட்டும், எட்டாநாள் விழா எண்குணம் விளக்குதற்பொருட்டும், ஒன்பதாநாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இல்லையெனற் பொருட்டும், பத்தாநாள் விழா பரமானந்தமாக்கடலில் அழுத்துதற்பொருட்டும், செய்யப்படுவது என விம்பதந்திரம் சிவோற்சவவிதிப்படலம் செப்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாகமம் கூறும் மகோற்சவ உண்மையை ஸ்ரீலஸ்ரீ: ஆறுமுகநாவலர் அவர்கள் சைவசமயநெறி பொதுவிலக்கணம் ௩௪[illegible]ம் திருக்குறள் விசேட உரையில் காட்டியிருக்கின்றனர். ஆசிரியர் ம. க. வே. பிள்ளைப் புலவர் அவர்களும் தாம் இயற்றிய சந்திரமௌலீசர்சதகமென்னும் ஈழமண்டல சதகத்திலே இருசெய்யுட்களில் இவ்வுண்மைகளை அமைத்திருக்கின்றனர்.

அச்செய்யுட்கள் வருமாறு:—

விழாவொன்று தூலம் விடுத்தற் பயத்தது
விழாவிரண் டுடலிரண்டும்
விள்ளற் பயத்தமுந் நாள்விழா வினைமுதன்
மும்மையா மெழுமைவீட்டல்
விழாநான்கு நாற்கரண நால்வகைத் தோற்றம்
விடுத்தலைந் தாநாள்விழா
விரவுமைம் பொறியைத் தவத்தைமல மைந்தும்
விலக்கன்மூ விருநாட்டிரு
விழாகாம மாதிகலை யாதிபத முத்திகள்
வினைக்குணமவ் வாறும்வீய்த்தல்
விழாவேழு சனனங் கலாதிமா யாமல
விதங்களெவ் வேழும்வேறல்

..............................................................

சந்த்ரபுர தலவாசனே.

எண்ணாள் விழாவெண் குணம்விளக் கற்பொருட்
டென்பவொன் பானாள்விழா
வெய்துமூன் றுருமுத் தொழின்மூன் றிடத்துறைத
லென்னுமொன் பதுமிலையெனல்
பண்ணுபத் தாகாள் விழாப்பரா னந்தமாப்
பரவையிற் படிதல்பயனும்
பத்துநா ளின்மேல் விழாவில்லை விம்பதந்
திரமீது பகருமதனிற்
கண்ணார வேகாண லாம்பத்து நாள்விழாக்
காட்டுகா ரியவிரிவினைக்
கழறிடு மகோற்சவத் தொருகாலை பகலுண்டு
காத்தல்விர தங்கடனதாம்

.............................................................

சந்த்ரபுர தலவாசனே.

## முதனாள் உற்சவம்.

முதனாள் உற்சவம் தூலதேகத்தை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டுச் செய்யப்படுவதாம். பரமவைத்தியராகிய சிவ பெருமான் தூலசூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களை யும் மருந்தாக எங்களுக்குத் தந்தது, மலமாகிய நோயை நீக்கி, அஞ்ஞானத்தைக் கெடுத்துச் சிவஞானத்தை விளக் கிச் சிவானந்தப் பெரும்பேறு தந்தருளுதற் பொருட்டே யாம். மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிர கிருதிமாயை என முத்திறப்படும். சுத்தமாயையிற் சிவதத் துவமைந்துந் தோன்றும்; அசுத்தமாயையில் வித்தியா தத்துவமேழுந் தோன்றும்; கலையிற் பிரகிருதி தோன்றும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகிருதியிற் புத்திதோன்றும்; புத்தியில் அகங்காரந் தோன்றும்; அகங்காரம் தைசதம், வைகாரிகம், பூதாதி என மூத்திறப்படும். தைசத அகங்காரத்தில் மனமும், ஞானேந்திரியமைந்துந் தோன்றும்; வைகாரிகாகங்காரத்தில் கன்மேந்திரியமைந்துந் தோன்றும்; பூதாதி அகங்காரத்தில் தன் மாத்திரை ஐந்தும் தோன்றும்; தன் மாத்திரையிற் பூதங்களைந்தும் தோன்றும். இங்ஙனம் ஆன்மதத்துவம் இருபத்துநான்குந் தோன்றும்.

சிவதத்துவம்.

சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை ரு.

வித்தியாதத்துவம்.

மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் எ.

ஆன்மதத்துவம்.

அந்தக்கரணம்: புத்தி, அகங்காரம், மனம், சித்தம் ச.

ஞானேந்திரியம்: சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் ரு.

கன்மேந்திரியம்: வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ரு.

தன்மாத்திரை: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ரு.

பூதம்: ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி ரு.

ஆக. ௩௬.

இவற்றுட் பஞ்சபூதங்களின் காரியமே தூலதேகமாய்த் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருதிவியிலுண்டான எலும்பு, தோல், தசை, மயிர், நரம்பு ௫.

அப்புவிலுண்டான சிலேட்டுமம், இரத்தம், மூத்திரம், மூளை, சுக்கிலம் ௫.

தேயுவிலுண்டான இருதய உஷ்ணம், அன்னபானாதிகளைச் சீரணிக்கச் செய்கை, நயனத்திற் சூடு, தேகத்திற் சூடு, பைத்தியம் ௫.

வாயுவிலுண்டான பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் வாயுக்கள் ௰.

அவ்வாயுவின் கூறுன இருத்தல், ஓடல், நடத்தல், கிடத்தல், நிறுத்தல் ௫.

ஆகாயத்திலுண்டான இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, புருடன், அலம்புடை, குகுதை, சங்கினி என்னும் நாடிகள் ௰.

ஆகாயத்தின் கூறுன காமம், குரோதம், லோபம், பயம், மோகம் ௫.

கன்மேந்திரியத்தின் றொழில்களான வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் ௫.

குணங்கள்: சாத்துவிகம், இராசதம், தாமதம் ௩.

வாக்குகள்: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ௪.

அகங்காரம்: தைசதம், பூதாதி, வைகாரிகம் ௩.

ஆக. ௬௰.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசநாடிகள்.

நாடிகள் தோற்றுதற்கிடமாகிய கிழங்கு நாபிக்குக் கீழிருக்கும். அதில் எழுபத்திராயிரம் நாடிகள் தோற்றி மேலுங் கீழுமாகச் சஞ்சரிக்கின்றன. அவற்றுள் தசநாடிகள் விசேடமுள்ளன. இடைநாடி கந்தத்தினிடப்புறத்திலிருந்து தோற்றிக் கத்தரிக்கோல்போல மாறி, பிராணவாயுவுடன் கலந்து, பிரமரந்திரம் வரையும் வியாபித்து இடநாசியைப் பற்றி நிற்கும். பிங்கலை நாடி கந்தத்தின் வலப்புறத்தி லிருந்து தோன்றி கத்தரிக்கோல்போல மாறிப் பிராண வாயுவுடன் கலந்து, பிரமரந்திரம் வரையும் வியாபித்து. வல நாசியைப்பற்றி நிற்கும். சுழுமுனைநாடி இரண்டு காற்பெரு விரலிலிருந்து தோற்றி மூலாதாரம்வரை இரண்டு வடிவுடையதாகவும், அதன்மேல் ஒரு வடிவுடையதாகவும், சகல நாடிகளுக்கும் ஆதாரமாயும் நடுநாடியாயும் பிராணவாயுவைச் சேர்ந்து, பிரமரந்திரம் வரையும் சகளரூபமாயும், அதற்கு மேல் துவாதசாந்தம் வரையும் நிஷ்களரூபமாயும் வியாபித்து நிற்கும். காந்தாரி வலக்கண்ணளவாய் நிற்கும். அத்தி இடக் கண்ணிலும் நாக்கிலும் நிற்கும். சிகுவை வலக்காதளவாய் நிற்கும். புருடன் இடக்காதளவாய் நிற்கும். அலம்புடை குறியளவாய் நிற்கும். குகுதை குதத்தளவாய் நிற்கும். சங்கினி நாசிமத்தியில் நிற்கும். நாடிகளெல்லாம் சக்கரம் போலச் சரீரத்தைச் சூழ்ந்திருக்கும்.

## தசவாயுக்கள்.

நாடிகளின் மத்தியில் வாயுக்கள் சஞ்சரிக்கும். இந்திர நீலரத்தினம்போன்ற பிராணவாயு நெற்றியிற் றோன்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரநாடியில் விழுந்து மூலாதாரத்திற் குதித்து, நாபித் தானத்தை முட்டி இருதயத்திலிருந்து உச்சுவாச நிச்சுவா சங்களை உண்டாக்கி, இடை பிங்கலைகளிலோடிக் கபாலத் தைச் சுற்றி நாசியிற் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு, நாலங்குலங் கழன்று, எட்டங்குலம் மீண்டு தான் நின்ற இடத்தைத் தாக்கும். இங்ஙனம் ஒருநாழிகையில் ௩௬௦ சுவாசமாக ௬௰ நாழிகையில் ௨௧௬௦௦ சுவாசமாகும். இருபத் தோராயிரத்தறுநூறு சுவாசம் இயங்கி, எ௨௦௦ சுவாசம் வெளியே கழிய ௧௪௪௦௦ சுவாசம் உள்ளேபோகும். இந்திர கோபநிறத்தையுடைய அபானன்குதத்தையும் குய்யத்தை யுஞ் சுற்றி நின்று, மலசலங்களைக் கழிப்பிக்கும். வெண்மை நிறமுடையதாகிய வியானன் உடம்பிலுள்ள சந்திகளை அடைந்து, தோலில் நின்று பரிசத்தை அறிவிக்கும். மின் னலையும் அக்கினியையும் போன்றதும் பெலமும் ரோகமும் உண்டாதற்கு இருப்பிடமாயுள்ளதும் ஆகிய உதானன் விலாக்களையும் காதுகளையும் கண்களையும் மூக்கையும் இட மாகக் கொண்டு இருக்கும். காயாமலரையொத்த நிற முடைய சமானன் கழுத்து சிரசு நாக்கு கணைக்கால் பரடு என்னுமிடங்களிலிருந்து எல்லாவாயுக்களையுங் கூடியுங் குறைந்தும் இருக்கவொட்டாது சமமாக்கிக்கொண்டு, உண்ட அன்னபானாதிகளை உதராக்கினியினாற் சீரணிக்கச் செய்து, பாதந்தொடங்கித் தலைவரையுமுள்ள எழுபத்தீரா யிரம் நாடிகளிலும் கலப்பித்துச் சரீரத்தை வளர்க்கும். பொன்னையும் இளஞ்சூரியனையும் ஒத்த நாகன் நெற்றி மூக்கு முதலியவற்றை இடமாகக் கொண்டு, மயிர்ச்சிலிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை உண்டுபண்ணும். குருந்த மலர்போன்ற நிறமுடைய கூர்மன் கண்ணிமையை அடைந்து, விழிக்கவும் மூடவுஞ் செய்யும். கருநிறமுடைய கிருகரன் மூக்குநுதியில் நின்று தும்மல் அழுகை நீட்டல் முடக்கல் அசைவு முதலிய வற்றையும் பசியையும் உண்டுபண்ணும். பளிங்குநிறமுடைய தேவதத்தன் முகத்தையும் முதுகையும் காலையும் பிடரையும் இடமாகக் கொண்டு, நித்திரையினின்று எழும்பச்செய்து, கொட்டாவியையும் ஓடல் உலாவல் முதலியவற்றையுஞ் செய்விக்கும். நீலநிறமுடையதாகிய தனஞ்சயன் தேகத்தில் அமிர்தத்தைச் சொரியச்செய்யும். உயிர் உடம்பைவிட்டு நீங்கியபின்பும், தான் பிரிகிலாது நின்று, உடலை வீங்குவித்தல் முதலியவற்றைச் செய்து, கபாலத்தைப் பிழந்து செல்லும்.

## வாக்கு.

சுத்தமாயாகாரியமான வாக்கானது சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என நால்வகைப்படும். சூக்குமை வாக்கானது சாந்தியதீதகலையைச் சார்ந்து தோன்றிச் சிவ தத்துவத்தினின்று தொழிற்பட்டுக் காரணசரீரத்தின் அகத்தே நாதவடிவாய் இயங்கிக்கொண்டு, ஞானமாத்திரைக் கேதுவாயிருக்கும். பைசந்தி வாக்கானது சாந்திகலையைச் சார்ந்து தோன்றி சத்தி தத்துவத்தினின்று தொழிற்பட்டு எழுத்துக்கள் வெவ்வேறுகப் பிரிந்து தோன்றும் முறையை அடக்கி, சூக்குமரூபமாய்ச் சித்தத்தில் நிற்றலும், நிர் விகற்பமாய்த் தோன்றுதலுமாயிருக்கும். மத்திமை வாக் கானது வித்தியாகலையைச் சார்ந்து தோன்றிச் சாதாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தினின்று தொழிற்பட்டுத் தன்னுள்ளே உணரும் ஓசையாய் உதானவாயுவின் றொழிற்பாட்டினால் உள்ளே அக்கரங்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாயிருக்கும். வைகரியானது சூக்குமவைகரி தூலவைகரி என இரு வகைப்படும். சூக்குமவைகரி பிரதிட்டாகலையைச் சார்ந்து, தன் செவிக்குக் கேட்கப்படுவதாய், மகேசுவரதத்துவத்தி லும், தூலவைகரியானது நிவிர்த்திகலையைச் சார்ந்து தன் செவிக்கும் பிறர்செவிக்குங் கேட்கப்படுவதாய் சுத்தவித்தை யிலும் நின்று தொழிற்படுவனவாம்.

எல்லாக்கருவிகளோடுங் கூடிய தூலதேகத்தைப் பொருந்தியஆன்மா, தேர்ப்பாகன் குதிரை, யந்திரம், அறிவு உற்சாகம் என்பவைகளால் தேரைச் செலுத்தி அதனோடு சம்பந்தமுற்று நிற்றல்போல, அன்னமயகோசமாகிய தூல தேகத்தைப் பிராணன் மனம் கலாதிதத்துவங்களாற் செலுத்தி, அதனோடு சம்பந்தப்பட்டு, எவ்விடத்தும் போக்குவரவுடைத்தாய்த் தூலமாகிய வினைகளைச் செய்து, சாக்கிராவத்தைப்பட்டு நிற்கும்.

சாதி குலம் பிறப்பு முதலியவற்றான் அபிமானஞ் செய்தற்கு இடமாகிய இந்தத் தூலதேகத்தின்பற்றை நீக்கி னலன்றிப் புத்தியின் குணமாகிய சுகதுக்கமோகங்களை நீக்கமுடியாது. ஆகையாற் சரீரத்தை வெறுத்து, அதனைத் தரித்தற்கு இளைத்து, நிலையற்றதெனத் தெளிந்து, தூல தேகத்திற்குக்காரணமாகிய பஞ்சபூதங்களும் அநித்திய மென்பதையறிந்து, நித்தியராகிய சிவபெருமானது திரு வடிகளில் அன்புவைத்து, இச்சரீரத்தை அச்சிவன்வசமாக ஒப்பித்து, அவரையே பற்றிநிற்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர்சுவாமிகள்.

(தனித்திருநேரிசை. திருமுறை. ௪.)

பாறினாய் பாவிநெஞ்சே பன்றிபோ லளற்றிற்பட்டுத்
தேறிநீ நினைதியாயிற் சிவகதி திண்ணமாகும்
ஊறலே யுவர்ப்புநாறி யுதிரமே யொழுகும்வாசல்
கூறையான் மூடக்கண்டு கோலமாய்க் கருதினாயே.

(திருநேரிசை—திருமுறை ௪.)

முப்பது முப்பத்தாறு முப்பது மிடுகுரம்பை
அப்பர்போ லைவர்வந்து வதுதரு கிதுவிடென்று
ஒப்பவே நலியலுற்றா லுய்யுமா றறியமாட்டேன்
செப்பமே திகழுமேனித் திருப்புக லூரனீரே.

சுந்தரமூர்த்திநாயனார்.

(பண்—பழம்பஞ்சுரம்.)

தேனைக் காவல்கொண்டு விண்டகொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல்கொண்டு நின்றாரறியாத நெறியானே
யானைக்காவி லரனே பரனே யண்ணாமலையானே
யூனைக்காவல் கைவிட்டுன்னை யுகப்பா ருணர்வாரே.

தாயுமானசுவாமிகள்.

நித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.

## இரண்டாநாள் உற்சவம்.

### தூலசூக்கும நீக்கம்.

சூக்குமஉடம்பு தூலஉடம்பிற்குக் காரணம், சூக்கும உடம்பு சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மாத்திரைகள் ஐந்தும், (தன்மாத்திரைகள் போகரூபமாய்ப் புறத்தேயிருப்பனவும், தேகரூபமாய் அகத்தேயிருப்பனவுமென இருதிறப்படும். இங்கே கூறியதன் மாத்திரை தேகரூபமாய் அகத்தே இருப்பன. ஐந்தாநாள் விழாவில் ஞானேந்திரியங்களின் விடயமாய்க் கூறப்படும் சத்தாதி புறத்தேயிருப்பன என்க.) மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றுமாகிய எட்டுத்தத்துவங்களால் உண்டாயது. குருடனுக்குக் கோலை ஆதாரமாகக் கொடுப்பதுபோல, கேவலாவத்தையில் அறிவு தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குச் சிவபெருமான் சூக்குமதேகத்தைக் கருணையினாற் கொடுத்தனர். மரப்பாவையை இயக்குவோன் கயிற்றினால் இயக்கிக் கயிற்றுடன் சம்பந்தப்பட்டு நிற்றல்போல, பிராணமயகோசமாகிய சூக்குமசரீரத்தைப் பிராணனால் இயக்கி, ஆன்மா அதனோடு சம்பந்தப்பட்டு நிற்கும். தூலசூக்குமதேகத்தின் வேறாகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக்கண்டு பற்று நீக்குதல் வேண்டுமென்னும் பாவனையாகவே இரண்டாநாள் விழா நடத்தப்படுகின்றது.

## மூன்றாநாள் உற்சவம்.

மூன்றாநாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் இவற்றின் நீக்கத்தின்பொருட்டுச் செய்யப்படுவது.

### க. மூவினை.

வினைகள்: ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். ஆகாமியமாவது:—ஒவ்வோர் பிறவிகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் செய்யப் படும் நல்வினை தீவினைகளாம். மனத்தினால் உண்டாகும் நல்வினைகள் அருளுடைமை, பொறை, பிறர்பொருள் விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, அபிமானம் பேணல், அழுக்காறின்மை, அவாவறுத்தல், பிறர்துன்பங்கண்டிரங்குதல், பிறர் கல்வி செல்வம் அழகு ஆதியவற்றைக் கண்டு சந்தோஷித்தல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம். வாக்கினாலுண்டாகும் நல்வினைகள்:—தருமம், ஞானங் கூறல், புறங் கூறாமை, உண்மை பேசுதல், நூலுரை கூறல், இனியவை கூறல், வேதாகமங்களை ஓதல் முதலியன. இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம். காயத்தினாற் செய்யும் நல்வினைகள்:—பிறர் மனை சேராமை, குளம், கூவல், தன்மசாலை, வித்தியாசாலை, நந்தனவனம், திருக்கோவில் முதலியவற்றை அமைத்தல். இவைகளுக்கு மாறுபட்டவை தீவினைகளாம்.

மேற்கூறிய நல்வினை தீவினைப் பயன்களை ஆன்மா திருட்டம், அதிருட்டம், திருட்டா திருட்டம் என மூவகையாக அனுபவிக்கும். நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற பயன்களைச் செய்த அப்பிறப்பில் அனுபவிப்பது திருட்டமெனப்படும். செய்தபிறவியில் அனுபவியாமை அதிருட்டமெனப்படும். செய்தபிறவியிலும் மறுபிறப்பிலு மனுபவிப்பது திருட்டாதிருட்ட மெனப்படும்.

சஞ்சிதமாவது:—அங்ஙனம் செய்யப்பட்டவினைகள் பயனுக்குவராமல் பக்குவமடையும்வரையும் புத்தி, தத்துவம் பற்றுக்கோடாக மாயையில் புண்ணியபாவமாய்க் கட்

டுப்பட்டுக்கிடக்கும். அங்ஙனம் கிடக்குங்காற் சூக்கும கன்மம் எனப் பெயர்பெறும்.

பிராரத்தமாவது:—கட்டுப்பட்டிருந்த சஞ்சித கன்மத்தைப் பக்குவப்பட்டவழி, சிவபெருமான் நியதிசெய்து தர ஆன்மா இன்ப துன்பமா யனுபவிப்பதாம். அனுபவிக்குங்கால் ஆதிதைவிகம், ஆதிஆன்மிகம், ஆதிபௌதிகம் என மூத்திறப்படும். ஆதிதைவிகமாவது:—உயிர்கள் முன்னிலையின்றித் தெய்வமுன்னிலையாக மாதாவின் கருப்பம், சனனம், மரணம், நரை, திரை, வியாதி, நரகம் முதலியவற்றினாலே துக்கப்படுதல். ஆதிஆன்மிகமாவது:—மிருகம், பறவை, இராட்சதர், பசாசு, கள்வர், மானுடர், முதலிய பிறவுயிர்களாலும், பிறர் கல்வி, செல்வம் ஆதிவற்றைக் கண்டு பொறாமைகொண்டு கோபியாய்த் திரிதல் முதலாகத் தன்னாலும் வருவது.

ஆதி பௌதிகமாவது :— குளிர், தீ, பனி, மழை, காற்று, மின்னல், இடி, சுவர்வீழ்தல் முதலிய பூதமுன்னிலையாக வருவது. தினந்தோறுஞ் செய்யுஞ் சிவபுண்ணியங்களால் ஆகாமியங் கெடும். ஆசாரியர் தீக்ஷையிற் செய்யும் அருட்பார்வையால், அக்கினியை அடைந்த வித்தைப்போலச் சஞ்சிதகன்மம் பயனுக்குவராமற் கெட்டுநீங்கும். பிராரத்தம் உடம்புடன் நீங்கும்.

திருநாவுக்கரசுநாயனார்.

(திருமுறை ௪. துறைர்த திருநேரிசை.)

**விளைக்கின்ற வினையைநோக்கி வெண்மயிர் விரவிமேலும்**
**முளைக்கின்றவினையைப்போகமுயல்கிலேனியலவெள்ளம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைக்கின்ற முடியினுன்றன் றிருவடி பரவமாட்டா[னே.
தினைக்கின்றே னிரும்பூன்றி யென்செய்வான் றோன்றினே

திருவாதவூரடிகள்.

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

## உ. மூப்புத்தி.

அவை: ஐயம், விபரீதம், மயக்கம் என்பன. ஐயமாவது:—மறுபிறப்பும், இருவினைப்பயன்களும், கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவுபிறவாது நிற்றல். விபரீதமாவது:—பொருளல்லாதவற்றைப் பொருளென்று உணர்தல். அஃதாவது மறுபிறப்பும், இருவினைப் பயன்களும் இல்லையென்றும், இவை முதலியவற்றைக் கூறுகின்ற பசுசாஸ்திரத்தை மெய்நூல் வழக்கமென்றுந் துணிதல். இதனுல் நால்வகைத்தோற்றங்களிலுஞ் சென்று துன்பத்தை அனுபவிப்பார்கள். மயக்கமாவது:—மாயையின் காரியமாகிய அஞ்ஞானமாகும். அருள்வழி நிற்போருக்கு மயக்கம்வந்து தாக்காது.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

(திருக்குறுந்தொகை.)

மால தாகி மயங்கு மனிதர்காள்
காலம் வந்து கடைமுடி யாமுனம்
கோல வார்பொழிற் கோளிலி மேவிய
நீல கண்டனை நின்று நினைமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவநாயனர்.

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

## ங. முக்குணம்.

குணமானது:—மாயையாகிய சடத்தின்குணமும், ஞானமாகிய சித்தின்குணமுமென இருவகைப்படும். மாயையின் குணமானது:—சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப்படும். இக்குணங்கள் மாயாகாரியமாகிய தநு கரண புவன போகங்களிற் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்களிடத்து நிகழ்வனவாம். ஞானகுணத்தின் வியாபாரபேதமான எண்குணங்கள் இறைவனிடத்து நிகழ்வனவாம்.

ஆன்மாக்கள் ஒன்றேடொன்று மாறுபடுவனவும் பந்தத்திற்கேதுவாயுள்ளனவுமாகிய மாயாகுணங்களை நீக்கினலேயன்றி, ஒன்றேடொன்று மாறுதலடையாத எண்குணப்பேற்றை அடையமாட்டா. எட்டாநாள் விழாவில் எண்குணம் விளங்கித்தோன்றும். ஈண்டு மாயாகுணநீக்கமுண்டாம். சாத்துவிகம் சாந்தத்தையும், இன்பத்தையுந் தந்து, நன்மைதீமைகளைப் பகுத்தறியச்செய்யும். இராசதம் பிரவிருத்தியையும், துன்பத்தையுந்தந்து, அறிந்தவற்றில் முயற்சியையுண்டாக்கும். தாமதம் மோகத்தையும், மூடத்தையுந் தந்து, சுகதுக்கங்களை வினைப்பயனென் றறியவொட்டாதபடி அவற்றிற் கட்டுப்படுத்தி மயக்கத்தையுண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தத்திற்கேதுவாகிய மாயாகுணங்களுடன் கூடி விடயங்களைப் பற்றித் தொழிற்படும்போது, ஆன்மா குணசரீரத்தைப் பொருந்தி, அந்தக்கரணத்தின் றன்மை விளங்கப் பெற்று, அம்மயமாய் நிற்கும். குணசரீரம் மனோமயகோசமெனப்படும். பாவையையாட்டுவோன் தனது கரத்தாலாட்டி அதனின் வேறின்றி நிற்பதுபோல, மனோமயகோசமாகிய குணசரீரத்தை மனத்தாலாட்டி ஆன்மா அம்மனத்தின் வேறின்றிநிற்கும்.

## ௪. மும்மனம்.

அவை: சிந்தித்தல், நிச்சயித்தல், கொண்டெழுப்பல் என்னும் இவற்றுக்கேதுவாகிய சித்தம், புத்தி, அகங்காரங்களாம். தைசத அகங்காரத்தினின்றும் மனந்தோன்றி, எதிர்ப்பட்டபொருளைச் சித்தரூபமாய் நின்று அப்பொருளின் உண்மையை அறியாமல், பிண்டமாகவறிந்து சிந்திக்கும். புத்தி ஆன்மாக்கள்செய்த புண்ணியபாவங்களைப் பொருந்தி, அப்புண்ணியபாவத்திற்கீடாக வந்தபொருளை நிச்சயிக்கும். நிச்சயிக்குங்கால் சிலகாலத்துச் சரியாயும், சிலகாலத்துப் பிழையாயும் இருக்கும். புத்தி தத்துவத்தில் அகங்காரதத்துவந் தோன்றி, இவ்விடத்து என்னோடொப்பார் ஒருவருமில்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய், உடலை யான் என்றும், மற்றைப்பொருள்களை எனதென்றும், புத்தியுடன் ஒருப்பட்டெழுந்து உயிரோடு வேற்றுமையின்றிநிற்கும்.

Prof. V. SIVASAMY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரு. முக்குற்றம்.

அவை: காமம், வெகுளி, மயக்கம் என்பன. காமம் — அவா. வெகுளி — கோபம். மயக்கம் — மனக்கலக்கம்.

அவாவாவது:—இவ்வுலகத்திலுள்ள சிற்றின்பப் பொருளைக் காமித்தலாம். பிறப்பிறப்புக்களிற் கட்டுப்படுத்துவதாகிய சிற்றின்பப் பொருளை அவாவிய ஆன்மாவிற்குத் தான் விரும்பிய பொருள் கிடைக்காவிடினும், பிறராற் றடை முதலியன வந்து சம்பவிப்பினும் கோபந் தோன்றி, அருளையும், அருளினாலுண்டாகும் முகமலர்ச்சியையும், அகமலர்ச்சியையுங் கெடுக்கும். இது செய்யலாம், செய்யலாகாதெனை ஆராய்ந்தறிகின்ற நல்லறிவும் நீங்கிவிடும். மனக்கலக்கத்தையும், இப்பிறப்பிற் பழியையும், மறுமையில் நரகத் துன்பத்தையு முண்டுபண்ணும். ஆகையால் இவ்வுலகத்து இன்பமும், சுவர்க்காதியுலக வின்பமும் ஆராயுமிடத்துக் கீழ்ப்பட்டவைகளெனக் கண்டு, அவாவையறுத்துக் கோபத்தையடக்கிச் சிவபெருமானை யன்புடன் தியானிக்க மனக்கலக்கம் நீங்கும். நீங்கவே மோக்ஷத்தில் அவாவுண்டாம்.

திருவாசகம்.

**உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலுங்**
**கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே**
**இரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்**
**துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ.**

திருநாவுக்கரசுநாயனார்.

(திருக்குறுந்தொகை திருமுறை ரு.)

**சினத்தி னல்வருஞ் செய்தொழி லாமவை**
**அனைத்து நீங்கிநின் றூதர வாய்மிக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தி னுன்மரு கற்பெரு மான்றிறம்
நினைப்பி னார்க்கில்லை நீணில வாழ்க்கையே.

(தனித்திருநேரிசை. திருமுறை ௪.)

மருளவா மனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா வறுக்குமெந்தை யிணையடி நீழலென்னும்
அருளவாப் பெறுதலின்றி யஞ்சினா னலமந்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே போதுபோய்ப்புலர்ந்த தன்றே.

திருக்குறள்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்.

## ௬. முப்பிறப்பு.

அவை; கழிந்தபிறப்பு, இப்பிறப்பு, வருபிறப்பு என்பன. இவை முறையே உம்மை, இம்மை, அம்மை எனவுங் கூறப்படும். பிறப்பு அநாதியாகலின் ஆன்மாக்களால் அளவின்றிச் சம்பாதிக்கப்பட்ட வினைப்பயன்களுள் கழிந்த பிறவிகளால் அனுபவித்தனவும், இப்பிறப்பில் உடம்புள்ளவரையும் அனுபவிப்பனவும், அனுபவித்து ஒழிய வருபிறப்பில் அனுபவிக்கும்படி இருக்கும் வினைகள் சிவபெருமானையுணர்ந்து அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீக்கினவர்களுக்கு வந்து தாக்கமாட்டா.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

(திருக்குறுந்தொகை.)

இம்மை யம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ம்மை யானிலே வார்கடம் வல்விலே
வம்மின் றீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே.

மயூரகிரிபுராணம்.

(மயூரகிரியிற் குமாரசுவாமி தோற்றியசருக்கம் உசு.)

இம்மை நற்றவ மூறுவந் திழுக்கினுங் கூடு
மம்மை யென்பது சரதமே யாகவெஞ் சூர
னும்மை முற்றுநற் றவப்பயன் கூட்டுற வுமையாள்
செம்ம றன்முனஞ் சேவலு மயிலுமாய்ச் சேர்ந்தான்.

## எ. முப்பற்று.

தனு, கரண, புவன, போகமென்னும் நான்கும் மாயையிலுண்டானவை. அவற்றுள் தனு கரண மென்னுமிரண்டும் நான் என்னுஞ் செருக்கினையும், புவன போக மிரண்டும் எனதென்னுஞ் செருக்கினையு முண்டாக்கும். தனு—தேகம். கரணம்—அந்தக்கரண புறக்கரணங்கள். புவனம்—பூமி முதலிய பிரபஞ்சம். போகம் — அனுபவிக்கப்படும் பொருள். தேகத்தை நானென்று சொல்லுகின்ற அகப்பற்றாகிய அகங்காரப் பிராந்தியை நீக்குதற்கு மண் முதலியவைகளை எனதென்று சொல்லுகின்ற புறப்பற்றை நீக்குதல் வேண்டும். புறப்பற்றானது விறகாகவும், அகப்பற்றானது அக்கினியாகவுமிருக்கும். விறகைப்பற்றிய அக்கினியானது மூண்டு பற்றி முழங்கி எரியும். விறகிலதேல் அக்கினியுமின்றாகும். ஆகையால் புறப்பற்று உள்ளளவும் அகப்பற்று ஆன்மாவை விட்டு நீங்காது. இவைகளை நீக்கினவர்களே மெய்ஞ்ஞானத்தை யடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பற்று உலகவீடணை, தனவீடணை, தாரவீடணை யென மூன்றும். உலகவீடணையானது; அநித்தியமானதும், மூலப்பிரகிருதியின் காரியமானதுமாயுள்ளது. தனவீடணை யானது; பொய்யான இன்பத்துக்குக் காரணமானதும், தன்னைவிட்டு நீங்குங்காலத்துத் துன்பத்தை யுண்டாக்கு வதுமாயுள்ளது. தாரவீடணையானது; பெண்களிடத்து வைக்குமாசை.

திருநாவுக்கரசுநாயனார்.

(திருக்குறுந்தொகை திருமுறை ரு)

கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோணிலி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே.

மாணிக்கவாசகசுவாமிகள்.

வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

சிவசத்தி வடிவாகிய நிவிர்த்தியென்னும் பெயரை யுடைய கிரியாசத்தியானது மண், பெண், பொன் முதலிய பிரபஞ்சப் பற்றுக்களினின்றும் ஆன்மாக்களை நிவிர்த்திசெய் யும். பிரதிட்டை என்னும் பெயரையுடைய ஞானசத்தியா னது; நிவிர்த்திசெய்யப்பட்ட ஆன்மாக்களை வாசனைபற்றி மீளாப்பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் நிலைபெறச்செய்யும். வித்தியாகலை என்னும் பெயரையுடைய இச்சா சத்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது; நிலைபெறச் செய்யப்பெற்ற ஆன்மாக்களுக்கு அனுமானஞானம் ஆகமஞானமின்றிச் சிவானுபூதி ஞானத்தைப் பயப்பிக்கும்.

## நான்காநாள் உற்சவம்.

நான்காநாள்விழா, அந்தக்கரணநீக்கத்தின்பொருட்டும், நால்வகைத்தோற்ற நீக்கத்தின்பொருட்டும் நடத்தப்படுகின்றது.

### க. அந்தக்கரணம்.

அந்தக்கரணமானது உள்ளந்தக்கரணம், புறஅந்தக்கரணம் என இருவகைப்படும். புறஅந்தக்கரணமாவது: மனம், சித்தம், அகங்காரம், புத்தி என்பன. இவை இந்திரியங்களுக்கு உள்ளாக இருத்தலால் அந்தக்கரணம் எனவும் கலாதிகளுக்குப் புறத்தேயிருத்தலால் புறஅந்தக்கரணமெனவுங் கூறப்படும். கலாதிதத்துவங்கள் மனம் முதலிய தத்துவங்களுக்கு உள்ளாகவிருத்தலால் உள்ளந்தக்கரணமெனப்படும். கலாதித்தத்துவங்களாகிய உள்ளந்தக்கரணநீக்கம் எழாநாள் விழாவில் நிகழும். நான்காநாள் விழாவில் புறஅந்தக்கரணநீக்கமே உண்டாகின்றது.

அரசன் அமைச்சரோடு கூடிநின்று அரசகாரியத்தை நடாத்துவதுபோல, யான் எனதென்னுஞ் செருக்குறுதற்கேதுவாகிய ஆணவமலச்சேர்க்கையாற் பகுத்தறிவின்றிக் கிடக்கும் ஆன்மா மனமுதலிய அமைச்சோடு கூடிச் சாக்கிர முதலிய அவத்தைகளைப் பொருந்தி விடயங்களை அறியும். அந்தக்கரணங்கள் சடமாகையால் தாமாக அறியமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் மகேஸ்வரன் விந்துவையதிட்டிக்க விந்து சித்தத்தை யுடனின்று செலுத்தச், சித்தம் யாதோ ஒரு பொருள் பிண்டமாகத் தோற்றுகின்றதென்று சிந்தித்தறியும். உருத்திரன் மகாரத்தையதிட்டிக்க, மகாரம் மனத்தைச்செலுத்த, மனம் சித்தத்தால் பிண்டமாக அறியப்பட்ட அப்பொருளைக் கட்டைதான் என்று சங்கற்பித்தும், கட்டையோ அன்றோ என ஐயுற்றும் அறியும். பிரமா அகாரத்தை அதிட்டிக்க, அகாரம் அகங்காரத்தைச் செலுத்த அகங்காரம் மனதால் இன்னதென்று நிச்சயிக்கப்படாத அப்பொருளை இன்னதென்று நிச்சயிப்பேன் என எழுந்து அகங்கரித்தறியும். விட்டுணு உகாரத்தை யதிட்டிக்க, உகாரம் புத்தியைச்செலுத்தப் புத்தி அப்பொருளை இன்னதுதான் என நிச்சயித்தறியும். இங்ஙனம் கடற்றிரைபோல் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும் அந்தக்கரணங்களைக் கருவியாகக்கொண்டு ஆன்மா அறியும். இவ்வாறு அறியும் பசுஞானம் வந்தபின்பு இவ்வறிவு முன்னில்லாமையால், நாமாக அறிந்தோமென்னும் நினைவையும் விடுத்து, அறிவிக்கும் பொருள் யாதுஎன ஆராயில் சிவஞானம் விளங்கித் தோன்றும். [இங்கே குறித்த பிரம விட்டுணு ருத்திரர்கள் சுத்தவித்தையிலிருப்பவர்என அறிக.]

நெஞ்சுவிடுதூது.

—அலைக்கு

மந்தமனம் புத்தியுட னுங்காரஞ் சிந்திவிழ—மோதி

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண். வியாழக்குறிஞ்சி, திருமுறை க.

பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவ தார்மேவுங் கழுமல வளநகரே.

## உ. நால்வகைத்தோற்றம்.

நால்வகைத்தோற்றங்கள்: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அவை ஆன்மாக்கள்செய்த நல்வினை தீவினை காரணமாக உண்டாகின்றன. அண்டசம் முட்டையிற் றோன்றுவன, அண்டம்—முட்டை; சம்—தோற்றுவது. அவை: பறவைகளும், பல்லி, பாம்பு முதலிய ஊர்வனவும், ஆமை, இப்பி, மீன் முதலிய நீர்வாழ்வனவுமாம். சுவேதசம் வேர்வையிற் பிறப்பன. அவை கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம். உற்பிச்சம்—மேற்பிளந்து தோன்றுவன. அவை: வித்து, வேர், கொம்பு, கிழங்கு முதலியவைகளிற்றோன்றும் மரம், பூண்டு, கொடி முதலியனவாம். சராயுசம் கருப்பையிற் றோன்றுவன. சராயு—கருப்பாசயப்பை. அவை: மனிதர், நாற்கால்விலங்கு முதலியனவாம்.

திருவாசகம்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
செல்லாஅ'நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாநாள் உற்சவம்.

ஐந்தாநாள் விழா, ஐம்பொறிகள், ஐந்தவத்தைகள், ஐந்து மலங்கள் என்னுமிவற்றின் நீக்கத்தின்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

இந்திரியங்களாலாகிய அறிவு பொய்யெனக்கண்டு, அவைகளைத் தம்மின் வேறெனவிடுத்துக் கேவலாவத்தை சகலாவத்தைகளைப்பொருந்தி அவைகளும் அஞ்ஞானத்தை உண்டாக்குவதால், தம்மின் வேறெனக்கண்டு சுத்தாவத்தையைப் பொருந்துதலினால் பிரபஞ்சப்பற்றுக் குறைந்து, பஞ்சமலங்கள் காரியப்பட்டுப் பாகம் வருதற்கு வழியாகும். அம்மலங்கள் நீங்கினாலன்றி அருளைப் பெறமுடியாது.

### க. ஐம்பொறி.

பளிங்கானது தன்னிடத்துக் காணப்பெறும் பலநிறங்களின் தன்மையை விளக்கிநிற்கும். அங்ஙனமாயினும் தோன்றிய பொருட்கள் பளிங்குக்கு வேறென்று அறியுமாறுபோல, ஆன்மாவிடத்துப் பொருந்திய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் பசுகரணமாய் நின்று உலகப்பொருள்களை அறியும். அறிவைவிளக்க ஆன்மா இந்திரியங்களின் தன்மையையே தன்னிடத்தில் விளங்காநிற்கும்.

இதனைச் சிந்தித்து வெவ்வேறு விடயங்களை உண்டு பண்ணுகின்ற இந்திரியங்களைத் தன்னின்வேறெனத் தெளிந்து, அவைகளாலாகிய அறிவு பொய்யென விடுத்தால் சிவஞானம் விளங்கும். அவ்வாறு விளங்கும்போது ஆன்மா சிவமாகிய சத்துக்கு அடிமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுசுவாமிகள்.

(திருக்குறுந்தொகை திருமுறை ரு.)

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே.

திருவாசகம்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை யன்பே.

உ. அவத்தை.

அவத்தை என்பது ஆன்மா தங்குமிடம். அது கீழால வத்தை, மத்தியாலவத்தை, மேலாலவத்தை என மூவகைப் பட்டுத் தனித்தனி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தாக விரியும். கீழாலவத்தை கீழ் நோக்கிச் சென்றொடுங்குவதும் மேல்நோக்கித் தோன்றுவதுமென இருவகைப்படும். கீழ்நோக்கிச்செல்லும் முறையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவத்தைகளுண்டு: ஆன்மா உறக்கத்துக்குச் சென்று

உறங்குமுன் புருவமத்தியில் சாக்கிராவத்தையைப்பொருந்தி ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரியமைந்து, சத்தாதியைந்து, வசனாதியைந்து, பிராணாதிவாயுப்பத்து, அந்தக்கரணநான்கு, புருடன் ஒன்று என்னும் முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனைவிட்டுக் கண்டத்தானத்தில் சொப்பனாவத்தையை அடையும்பொழுது, வாயுப்பத்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக்கரணநான்கு, புருடன் ஒன்று என்னும் இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனைவிட்டு இருதயத்தானத்தில் சுழுத்தியை அடையும்பொழுது பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனைவிட்டு நாபித்தானத்தில் துரியாவத்தையை அடையும்பொழுது பிராணன், புருடன் என்னும் இரண்டுடன் கூடிநிற்கும். இதனைவிட்டு மூலாதாரத்தில் துரியாதீதத்தை அடையும்பொழுது, புருடதத்துவமொன்றினைக் கூடிநிற்கும். இவ்விதம் ஒடுங்குவதினால் இளைப்பு நீங்கும்.

மேனோக்கித் தோன்றும் முறையாவது துரியாதீதத்தையடைந்த ஆன்மா முன்னொடுங்கிய முறையே ஒவ்வொரு தத்துவத்தையும் பொருந்தி, புருவநடுவில் சாக்கிராவத்தையயடையும். அடைதலினால் கன்மத்தின் பயனை அனுபவிக்கும். அனுபவிப்பதனால் பிறவி நீங்கும்.

மத்தியாலவத்தையாவது: சாக்கிராவத்தைக்கிடமாகிய புருவநடுவில் விடயங்களை அனுபவித்தலில் இடைவிடாது நிகழ்வதாகிய சாக்கிரத்திற் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பொருந்துதல், விடயங்களை நேரேயனுபவித்தல் சாக்கிரத்திற் சாக்கிரமாம். சுகதுக்கங்கள் வந்த வரலாற்றைநாடி மனோவியாபாரஞ் செய்துநிற்றல், சாக்கிரத்திற் சொப்பனமாம். சுகதுக்கத்தில் மூழ்கிநிற்றல் சாக்கிரத்திற் சுழுத்தியாம். சுகதுக்கந் தோன்றாது பெருமூச்செறிந்து நிற்றல் சாக்கிரத்திற் றுரியமாம். சுகதுக்கங்களைக் கேட்டமாத்திரத்தில் திடுக்கிட்டுப் பிராணவாயு சீவியாமல் மூர்ச்சித்து, மயங்கிநிற்றல், சாக்கிரத்திற் றுரியாதீதமாம். இந்திரியங்கள் விடயங்களை யறியினும் தம்மையும் தம்மைச் செலுத்துகின்ற ஆன்மாவையும் அறியமாட்டாத தன்மை போல, ஆன்மாவும் தமக்குத் துணையான திரோதானசத்தியினால் கீழாலவத்தையிலும் மத்தியாலவத்தையிலும் நின்று வினைப்பயன்களை அனுபவிப்பினும், அனுபவிக்குந் தம்மையும், தம்மைச் செலுத்துகின்ற திரோதானசத்தியையும் அறியமாட்டா.

மேலாவத்தையாவது: கீழ்நோக்கித் தோன்றுவதும், மேற்சென்றொடுங்குவதுமென இருவகைப்படும். கீழ்நோக்கித் தோன்றுவது பிறவிக்குக் காரணமாகும். மேற்சென்றொடுங்கும் முறையாவது: இருதயத்திற் சாக்கிராவத்தையையும், கண்டத்தானத்திற் சொப்பனாவத்தையையும், நாக்கினடியிற் சுழுத்தியையும், புருவநடுவில் துரியத்தையும், பிரமரந்திரத்தில் துரியாதீதத்தையும் பொருந்துதல். இவை யோகப்பயிற்சி யுடையார்க்குத் தோன்றும். இதனாற் பிரபஞ்சப்பற்றுக் குறைந்து பிறவியறுதற்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௩. ஐந்துமலம்.

அவை: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன.

### ௧. ஆணவம்.

ஆணவமாவது; அநாதியேயுள்ளதாய், ஒன்றாய், அநேக சத்திகளையுடையதாய், ஆன்மாக்களோடு சேர்ந்து நிற்பதாய், தன்னுருவைப் பிறரறியாதபடி மறைத்திருப்பதாய், மோகம் முதலிய கெட்டகுணங்களை உண்டாக்குவதாய், கேவலத்தில் அறியாமையைச் செய்வதாய், சகலத்திற் கருவிகளோடுங் கூடியவிடத்து விபரீதஉணர்வைச் செய்வதாய், அரிசியினுற்பத்திக்குக் காரணமாகிய உமி போலச் சரீரஉற்பத்திக்குக் காரணமாய், செம்பைப்பற்றியிருக்குங் களிம்புபோல்வதாய், பாகம்வந்தகாலத்து தீக்ஷையில் நீக்கப்படுவதாய் உள்ளது.

### ௨. கன்மம்.

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவினைக்கும் முதற்காரணமாய், இடையறாதொழுகும் நீரோட்டத்தில் முன்வந்தநீரிது பின்வந்தநீரிது எனப் பிரித்தறியமாட்டாதவாறுபோல முன்செய்த கன்மமிது பின்செய்த கன்மமிது எனப் பிரித்தறியப்படாததாய், நெல்லுக்கு முளை போல்வதாய், முற்பிறப்பிலேசெய்த வினைக்கேற்பச் சாதி, ஆயுள், வடிவம், போகங்களைக் கொடுப்பதாய், அனுபவித்துத் தொலையும்வரையும் நீங்காததாய், தூலசூக்கும தேகங்களின் வியாபகமுடையதாய், மனத்தைவிட்டு நீங்காததாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்செயலற்றுச் சிவன்செயலாயுள்ளவர்களைப் பந்தியாதது யுள்ளது.

### ௫. மாயை.

மாயையானது; சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூவகைப்படும். சுத்தமாயையாவது; நித்தியமாய், வியாபகமாய், அருவாய், சடமாய், அறிவையுண்டாக்குவதாய், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்களும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் ஐந்து கலைகளும், சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சிவதத்துவமைந்தும், சுத்தகாலம் முதற் சுத்தநிலமிறுதியாகிய முப்பத்தொருதத்துவங்களுந் தோன்றுதற்கு முதற்காரணமாய் உள்ளது. அசுத்தமாயையானது அழியாததாய், வியாபகமாய், சடமாய், விபரீதவுணர்வைக் கொடுப்பதாய், பிரளயகாலத்திலே ஆன்மாக்கள்செய்த கன்மத்துக்கு உறைவிடமாய், சுத்தாசுத்தகாலமுதல் அசுத்தநிலமீறாக முப்பதுதத்துவங்களுந் தோன்றுதற்கு முதற்காரணமாயுள்ளது. பிரகிருதிமாயை அசுத்தமாயையினின்றுந் தோன்றியமையால் அநித்தம் எனப்படும்.

### ௬. மாயேயம்.

மாயாகாரியங்கள் தநு கரண புவன போகங்களாம். தநு—தூலவுடம்பு. கரணம்—இந்திரிய அந்தக்கரண முதலிய சூக்குமவுடம்பு. புவனம்—உலகம். போகம்—உலகத்திலே உள்ள அநுபவிக்கப்படும் பொருள். வஸ்திரத்தின் அழுக்கைக் காணி உவர்மண் முதலிய வேறழுக்கைக் கொண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணான் முற்றாக நீக்கி வெண்மையாக்குவதுபோல இறைவன் மாயாகாரியமாகிய தனு கரண புவன போகங்களை ஆன்மாவிற்கூட்டி, ஆணவமலத்தையும், கன்மமலத்தையும் நீக்கிச் சிவானந்தப்பெரும்பேறு கொடுப்பர்.

## ரு. திரோதாயி.

ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருவித்தற்பொருட்டு வினைப்பயன்களை அனுபவிக்கச்செய்வதும், ஆணவத்தோடு நின்று அதைப் பக்குவப்படுத்துவதும், திரோதானசத்தியாகும். திரோதானம்—மறைத்தல். மலபரிபாகஞ் செய்வதற்காகவே சிவசத்தி திரோதாயி என்னும் பெயரைப் பொருந்தும். மலபரிபாகம் வந்தவிடத்து இச்சத்தி திருவருட்சத்தியாகும்.

தாயுமானசுவாமிகள்.

பாசசா லங்களெல்லாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநா ளெந்நாள் விளம்பாய் பராபரமே.

சுந்தரமூர்த்திசுவாமிகள்.
(பண்—நட்டபாடை.)

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையாணினைந் தேத்தும்
தலந்தாங்கிய புகழாமிகு தவமாஞ்சது ராமே.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுநாள் உற்சவம்.

உட்பகைஆறும், அத்துவாக்களாறும், கன்மமலகுண மாறும், பதமுத்தி ஆறும், நீங்குதற்பொருட்டுச் செய்யப் படுவதாம்.

### க. உட்பகைகளாறு.

அவை: காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. காமம் என்பது, பொன், வீடு, பூமி முதலியவைகளை அதிகமாகச் சம்பாதித்தற்கு விருப்பம் வைத்தல். குரோதமென்பது, தனக்குத் தீமைசெய்தானுக் குத் தானும் அதற்கெதிராய்த் தீமைவிளைத்தல். உலோப மென்பது, தான் தேடியபொருளை அற்பமேனும் சிவபுண் ணியத்திற் கீயாதிருத்தல். மோகமென்பது, மாயாசம்பந்த மாகிய பொருள்களில் இடையறாது ஆசைவைத்து மயங்கு தல். மதம் என்பது, திரவிய முதலியவற்றால் செருக்குற் றுப் பிறரைமதியாமை. மாற்சரியமென்பது, பிறரனுபவிக் குஞ் சுகங்கண்டு சகிக்கமாட்டாது பொறாமைகொள்ளுதல்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கி ஞாலம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கத்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலை யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. அத்துவாக்கள் ஆறு.

அத்துவாவென்பது, வழி. அது புண்ணிய பாவங்கள் வரும் வழியும், ஆன்மா சிவபெருமானையடையும் வழியுமென இருவகைப்படும். மந்திரங்களை உச்சரிக்கும் பேதங்களையறிந்து உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் மந்திராத்துவாவின் வழியாகப் புண்ணியபாவகன்மம்வரும். பதங்களைப் பிரிக்கும் முறையை அறிந்து பிரிப்பதனாலும், மாறுபடப் பிரிப்பதனாலும், பதாத்துவாவின் வழியாகப் புண்ணிய பாவகன்மம்வரும். அக்கரங்களின் குறில் நெடில் அளபெடைகளை அறிந்து உச்சரிப்பதனாலும், உச்சரியாமையாலும் வன்னாத்துவாவின் வழியாகப் புண்ணியபாவ கன்மம் வரும்.

ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக் கரணங்களால் பிறர்க்கு இதம் அகிதம் செய்வதனாலும், தருமவழியாற் பொருளைத்தேடிப் போகமனுபவிப்பதனாலும், பாவ வழியாக வந்த பொருளை அனுபவிப்பதனாலும் தத்துவாத்துவாவின் வழியாகப் புண்ணியபாவம் வரும். புவனாதிபர்களைப் பூசிப்பதனாலும் நிந்திப்பதனாலும் புவனாத்துவாவின் வழியாகப் புண்னியபாவ கன்மம்வரும். கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, ஆதிசத்தி, பராசத்தி என்னும் பஞ்சசத்திகளைப் பூசித்து வழிபடுவதனாலும், நிந்திப்பதனாலும் கலாத்துவாவின் வழியாகப் புண்ணியபாவ கன்மம் வரும்.

மந்திரம், பதம், வன்னம் என்னும் மூன்றும் சொற்பிரபஞ்சம் எனப்படும். புவனம், தத்துவம், கலை என்னும் மூன்றும் பொருட்பிரபஞ்ச மெனப்படும். சொல்லாவது — எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும், அவ்வெழுத்தாலாகிய பதமும், பதத்தாலாகிய மந்திர முமென மூவகைப்படும்.

பொருளாவது — உடலும், உலகமும், அவைகளை ஆக்குஞ் சத்தியுமென மூவகைப்படும். அவற்றுள், உடலாவது இந்திரியம், அந்தக்கரணம் முதலிய தத்துவவடிவாயிருக்கும். புவனம் — பஞ்சபூதவடிவாயிருக்கும். சத்தி — கலைவடிவாயிருக்கும். இங்ஙனம் சொல்லும் பொருளுமாகிய ஆறத்துவாக்களும், ஆணவகேவலத்தே கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குதற்கு வழியாகத் தோற்றுவன. அவ்வறிவு விளக்கம் ஏகதேசமென்பதை அறிந்தபின், இவ்வத்துவாக்களாறனையும், ஒன்றிலொன்று அடங்க ஒடுக்கும் முறையினால் சிவபெருமானை அடைதற்கு வழியாகும். மந்திரம் பதத்திலொடுங்கும், பதம் வன்னத்திலொடுங்கும். இம்மூன்றுஞ் சொல்வடிவாதலால், சொல் பொருளைக் குறித்தன்றி நில்லாமையால், அச்சொல் வெளிப்படையாகக் காணப்படும் பொருளாகிய புவனத்திலொடுங்கும், புவனம் தத்துவத்திலொடுங்கும். தத்துவம் கலையிலொடுங்கும். நிவிர்த்தி கலை பிரதிட்டாகலையிலொடுங்கும். பிரதிட்டாகலை வித்தியாகலையிலொடுங்கும். வித்தியாகலை சாந்திகலையிலொடுங்கும். சாந்திகலை சாந்தியதீத கலையிலொடுங்கும். சாந்தியதீதகலை பஞ்சகலைக்கும் ஆதாரமாயிருக்கும் சிவசத்தியிலொடுங்கும். சிவசத்தி சிவத்திலொடுங்கும். இங்ஙனம் ஒடுங்குவதனால் சிவபெருமான் பிறவிக்கேதுவாகிய மலத்தை ஞானசத்தியாற் கெடுத்துப் பிறவியை நீக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. கன்மமலத்துணம் ஆறு.

அவை: இருத்தல், கிடத்தல், இருவினையியற்றல், விடுத்தல், பரநிந்தை, மேவல் என்பன.

ஆன்மாக்கள் செய்த வினைப்பயன்களை அநுபவித்தற்காகச் சிவபெருமான் கொடுக்கும் உடம்புகள் பூதவுடம்பு, பூதசாரவுடம்பு, யாதனாவுடம்பு என மூவகைப்படும். புண்ணியஞ்செய்த ஆன்மாக்கள் இப் பூதவுடம்பு நீங்கியவுடன் சூக்குமசரீரத்துடன் பூதசாரவுடம்பிற் பிரவேசித்து சுவர்க்கத்திலிருந்து இன்பத்தை அநுபவித்து முடிந்தவுடன் சூக்குமதேகத்துடன் பூமியில்வந்து மீட்டும் பூதவுடம்பை எடுத்துப் பிறப்பார்கள்.

மகாபாதகங்களைச் செய்தவர்கள் சூக்குமதேகத்துடன் சென்று பிரகிருதிதத்துவத்தில் குறித்தகால எல்லைவரையும் கற்போற்கிடந்து, பின்பு கொடியநரகங்களிற் சென்று துன்பத்தை அநுபவித்து முடிந்தவுடன் பூவுலகத்தை அடைந்து, பிறந்திருந்து எஞ்சிய வினைப்பயன்களை அநுபவிப்பார்கள். சில ஆன்மாக்கள் இப்பூதவுடம்பு நீங்கியவுடன் பாவத்தின் வன்மை மென்மைக்கேற்றபடி சூக்கும சரீரத்துடன்சென்று யாதனாசரீரத்திற் பிரவேசித்து நரகத்திற் கிடந்து துன்பத்தை அநுபவித்து முடிந்தவுடன் சூக்கும சரீரத்துடன் பூவுலகத்தை அடைந்து, கருப்பாசயத்தைப் பொருந்தி, முன் அநுபவித்து எஞ்சிய வினைகளை அநுபவித்தற்குத்தக்க பூதவுடம்பை எடுத்து நோயாளிகளாய்க் கிடந்து வருந்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுசுவாமிகள்.

நாளு நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளு நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோனிலி யரன் பாதமே கூறுமே.

சிவபெருமானையும், குருவையும், குருபுத்திரர்களையும் நிந்தித்தவர்கள் முயலகனென்னும் வியாதியாலும், குருவையும், பிராமணர்களையும் கோபித்தவர்கள் மண்டைநோயாலும், குருவை மனிதனெனப் பாவித்தவர்கள் குறியிற் புண்ணினாலும், பிரமக்கொலை செய்தவர்கள் கயரோகத்தாலும், குருதாரகமனஞ் செய்தவர்களும், ஏரிகுளங்களின் கரையை வெட்டினவர்களும், மெய்யடியார்களை நிந்தித்தவர்களும் குட்டரோகத்தாலும், தமது வீட்டிற்குவரும் அதிதிகளுக்கு அன்னங்கொடாதுண்டவர்கள் கன்ன நோயாலும், தபோதனருடைய அன்னத்தைத் திருடிப்புசித்தவர்களும், பொய்ச்சாட்சி சொன்னவர்களும் வாய்ப்புண்ணினாலும், பிறர்பொருளைக் கவர்ந்தவர்களும், அவருக்குத் துணை செய்தவர்களும், உபாயங்களைச் சொன்னவர்களும் நேத்திரரோகம் காவில்வியாதி என்பவற்றாலும், புடைவை திருடினவர்கள் வெண்குட்டத்தாலும், அன்னசத்திரங்களையும், தண்ணீர்ப்பந்தர்களையும் அழித்தவர்கள் நீர்க்கோவை என்னும் உதரநோயாலும், பசுவை வதைசெய்தவர்களும், சிவசாத்திரங்கள் எழுதிய திருமுறையைத் திருடினவர்களும் பிறவிக்குருடராயும், வேதாகமங்களை அறிந்த பெரியோர்களை நிந்தித்தவர்கள் பைத்தியத்தாலும் வருந்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கூறுமொழிந்த பாவங்களைச் செய்தவர்கள் அனுப விக்கும் கன்மரோகங்கள் இவை இவை என்பதைச் சிவதரு மோத்தரம் ஆதியாம் நூல்களுட்காண்க.

வேதாகமவழி நடந்தவர்கள் நல்வினையையும், அவ்வழி நடவாதவர்கள் தீவினையையும் செய்வார்கள்.

தீவினைத் தொடர்புள்ளவர்கள் அனுட்டானம், சிவ பூசை, ஓமம், தானம், ஆலயசேவை, சிவத்தியானம் முத லியவற்றை விடுத்து வருந்துவார்கள்.

மகாபாதகங்களைச் செய்தவர்கள் சிவபெருமானையும், சிவனடியார்களையும், குரு முதலிய பெரியோர்களையும் நிந் திப்பவர்களாய் இருப்பார்கள். சிவநிந்தையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களும், அவர்களுடன் பொருந்துபவர்க ளும் தீவினையாளர் எனப்படுவர்.

'இருபாவிருபஃது.

இருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகா ணெஞ்சமே
வண்டு மாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே.

௬. பதமுத்தி ஆறு.

அவை: பிரமசாலோகம், பிரமசாமீபம், பிரமசாரூபம், விஷ்ணுசாலோகம்,விஷ்ணுசாமீபம்,விஷ்ணுசாரூபம்என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம விட்டுணுக்களுடைய உலகங்கள் அசுத்தமாயா தத்துவ புவனங்களாதலாலும், மயாகாரியமாதலாலும், காமியகன்ம தவயோகிகள் எய்தும் பதமுத்திகள் ஆதலாலும், மெய்ஞ்ஞானிகளெய்தும் பரமுத்தி ஆகாமையினாலும், பிரம விட்டுணுக்கள் மாயாகுணமூர்த்திகள் ஆனமையாலும், அசுத்தமாயாதத்துவ புவனங்களைச் சிவாஞ்ஞையால் படைத்துக் காப்பவர் ஆனமையாலும் இவர்கள் ஓர் வகைப் பரபோகத்தைக் கொடுக்கும் மூர்த்திகளேயன்றி மாயாகாரியமாகிய பஞ்சகோசமும் நீக்கிய வீடுபேறருளும் பதியாகார்கள்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

(திருக்குறுந்தொகை.)

நூறு கோடி பிரமர்க ணொந்தினர்
ஆறு கோடிநா ராயண ரங்ஙனே
ஏறு கங்கைமண லெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே

திருவாசகம்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

ஏழாநாள்உற்சவம்.

எழுவகைப்பிறப்பும், வித்தியாதத்துவமேழும், மாயாமலகுணமேழும் நீங்குதற்பொருட்டாக நடத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. எழுவகைப்பிறப்பு.

நால்வகைத்தோற்றத்தினுல் உண்டாகும் பிறவிகள் எழுவகைப்படும். அவை; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. எழுவகைப் பிறப்பில் எண்பத்துநான்கு இலட்சம் யோனிபேதங்கள் தோற்றுவன.

தேவர் பதினொருலட்சம் யோனிபேதம்,
மனிதர் ஒன்பதுலட்சம் யோனிபேதம்,
விலங்கு பத்துலட்சம் யோனிபேதம்,
பறவை பத்துலட்சம் யோனிபேதம்,
ஊர்வன பதினொன்றுலட்சம் யோனிபேதம்,
நீர்வாழ்வன பத்துலட்சம் யோனிபேதம்,
தாவரம் பத்தொன்பதுலட்சம் யோனிபேதம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

(பண்—மேகராகக்குறிஞ்சி.)

உரைசேருமெண்பத்து நான்குநா
றாயிரமாம் யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. வித்தியாதத்துவமேழ.

அவை: காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன.

கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு காலதத்துவத்தை எழுப்பக் காலம் முக்காலங்களிலுமுள்ள புசிப்பைக் கூட்டும். கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு நியதி தத்துவத்தையெழுப்ப நியதி அவரவர்செய்த கன்மத்தை அவரவர் அனுபவிக்குமாறு நியமிக்கும். கிரியாசத்தி சத்தி தத்துவத்தைக்கொண்டு கலாதத்துவத்தை யெழுப்ப, "எங்கும் மூடிக்கொண்டிருக்கும் அந்தகாரத்தில் தீபமானது அந்த இருளை அடக்கி விஷயத்தைக் காட்டுவதுபோல" ஆன்மஅறிவை மறைத்துக்கொண்டிருக்கும் கன்மஇருளைக் கலைஅடக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிக்கும். ஞானசத்தி சுத்த வித்தியாதத்துவத்தைக் கொண்டு வித்தியாதத்துவத்தை எழுப்ப, வித்தை அறிவையுண்டாக்கும், இச்சாசத்தி ஈசுவரதத்துவத்தைக் கொண்டு அராகத்தை எழுப்ப, அராகம் பெத்தர்களுக்கு ஆசையை யுண்டுபண்ணும். கலாதி ஐந்து தத்துவங்களுங்கூடிய சங்கத்தில், உண்டானபுருடத்துவத்தைச் சாதாக்கிய தத்துவங் காரியப்படுத்தப் புருடன் போகத்திலாசையை யுண்டுபண்ணும்.

## ங. மாயாமலகுணம்.

அவை: அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசுந்நியம், மார்ச்சரியம், பயம் என்பன.

அஞ்ஞானமாவது; விபரீதஉணர்வு, அது பொய்யை மெய்யென்றுகொள்ளுதல். பொய்யாவது; தான் அறிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைப் பிறர் அறிந்திலரென நினைந்து உள்ளதை மறைத்துப் பிறர்க்குத் தீமைபயக்குஞ் சொற்களைச் சொல்லுதல், அதற்கு எஞ்ஞான்றும் தன்மனமே சாட்சியாயிருக்கும். பொய்சொல்லுவது எல்லாப்பாவங்களுள்ளும் தலையாய பாவமாகும். அது காமத்தாலும் பொருளாசையாலும் வருவதும், இம்மைமறுமைப்பயன்களைக் கெடுப்பதுமாயுள்ளது. அயர்வாவது; கண்டதை மறந்து மயங்கி வருந்துதல். மோகமாவது; குருவினாலும், நூலினாலும், தீயனவென் றறிந்தவற்றில் நீங்காமல்நிற்கும் மயக்கம். பைசுந்நியமாவது; காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து தூற்றிக் கண்டவிடத்து முகமலர்ச்சிகாட்டிப் பொய்யன்புசெய்தல். மார்ச்சரியமாவது; பிறருடைய கல்வி, செல்வம் முதலியவற்றைக் கண்டு சந்தோஷமடையாது அவர்களுக்குத் தீங்கு நினைத்தலும், தீமைசெய்தலும், தீமைசொல்லுதலுமாம். பயமாவது; உயிருக் கிறுதிவருமென்று அச்சப்பட்டுத் திரிகையாம். மாயாமலகுணங்களை நீக்கினவர்கள் மனச்சுத்தியையும், ஞானத்தையுமடைந்து பிறப்பினின்று நீங்குவர்.

இருபாவிருபஃது.

அஞ்ஞானம்பொய்யயர்வேமோகம்
பைசுந்நியமாற்சரியம்பய
மாயவேள்குணனுமாயைக்கருளிணை.

கஞ்சுகசரீரம்.

மாயாகாரியமாகிய கலாதி ஐந்துதத்துவங்களும் ஆன்மாவிற்குச் சட்டையாயிருத்தலால் கஞ்சுகசரீரமெனப்படும். கஞ்சுகசரீரத்தைப் பொருந்தியபொழுது, அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்சை செயல்கள் வியட்டி ரூபமாகப் பிரிந்துதோன்றிச் சிறப்புவகையால் விளங்கப்பெறும் உணர்வும், விருப்பும், செய்யுந்திறமும் தூலமாய் விளங்கப்பெற்று அதன்மயமாய் நிற்றலின் கஞ்சுகசரீரம் விஞ்ஞானமயகோச மெனப்படும். விஞ்ஞானம் என்பது விசேடஞானம்.

பரகாயப்பிரவேசஞ் செய்யுங்கால் உயிர்நீங்கிய பரகாயத்தின் விருப்பால் பிறிதோருடம்பிற் பிரவேசித்து, அவ்வுயிராய் நிற்பதுபோல, விஞ்ஞானமயகோசமாகிய கஞ்சுகசரீரத்தைச் செலுத்துங்கால் அறிவு முதலிய இல்லாதகலாதிகளில் ஆனந்தத்தால் ஆன்மா பிரவேசித்து அக்கலாதிகளின் வேறின்றிநிற்கும்.

## காரணசரீரம்.

பிருதிவி முதல் முப்பது தத்துவங்களுந் தோற்றுதற்குக் காரணமாயிருத்தலால் மாயை காரணசரீரமெனப்படும். அநாதியே ஆணவமலத்தான் மறைப்புண்டு பசுவென நின்ற ஆன்மா அறியாமையினாற் றுன்பமடைந்து வருந்துவதற்கிரங்கி, அநந்ததேவரருளாற் றூக்கப்பட்ட அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமாகிய காரணசரீரத்தைப் பொருந்தும். காரணசரீரத்தைப் பொருந்தியபொழுது உணர்வும், விருப்பும் செய்யுந்திறமுந் தோன்றி, நல்லது தீயது என்ற உணர்வின் பகுப்பும், வேண்டும் வேண்டாமென்ற விருப்பு வெறுப்பின் பகுப்பும், செய்யும் முறை இவ்வாறென்ற தொழிலின் பகுப்பும், பொதுவகையாற் சமட்டிரூபமாக விளங்கப்பெறும். அப்பொழுது ஓர் ஆநந்தமுண்டாகப் பெற்று அம்மயமாய் நிற்றலின் காரணசரீரம் ஆநந்தமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசம் எனப்படும். வேடங்களைக் கட்டியாடுவோர் கட்டிய வேடத்துக்குரியராய் நடித்து அதனின் வேறின்றி நிற்பது போல, ஆநந்தமயகோசமாகிய காரணசரீரத்தைச் செலுத்துங்கால் ஆன்மா அவ்வானந்தமயமாய் அதனின் வேறின்றி நிற்கும்.

விருப்பு வெறுப்புக்களுக்கு ஏதுவாகிய காரணசரீரத்தை வெறுத்த ஆன்மா, நின்மல கேவலநிலையை யடைந்து, உண்மை அறிவுவடிவாகிய சிவமாய் எண்குண விளக்கத்தைப் பெற்று நிற்கும்.

## எட்டாநாள் உற்சவம்.

எட்டாநாள் விழா எண்குணவிளக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. அக்கினியானது இரும்பைத் தன்வண்ணமாக்குவதுபோல, சிவபெருமான் ஸ்ரீபஞ்சாட்சரத்தை இருதயத்தில் தியானிப்பவர்களுக்கு வாசனாமலத்தையும் நீக்கித் தன்வண்ணமாக்கி, தமது ஞானகுணத்தின் வியாபார பேதமாகிய எண் குணங்களும் அவ்வான்மாக்களுடையன வாகக் கொடுத்தருள "மேவுசிவ சுபாவமதே தனது சுபாவமதாய்—விளங்குவன்" எனச் சர்வஞ்ஞானோத்தரங் கூறியவாறு எண்குணங்களும் தமது சுபாவமாகப் பிரகாசிக்கப் பெறும். இதுவே சிவானந்தமேலிடுகை எனப்படும். எண்குணங்களாவன:— சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அநாதிபோதம், சுதந்திரத்துவம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வஞானோத்தரம்.

"சர்வஞ்ஞ தாதிருத் தியனாதி போதம்
அறைசுதந் தரதா அலுத்த சத்தி
நிறையனந்த சத்தி நிராமய வான்மா
செறிவிசுத்த தேக மிவைசிவத் துவமே"

இவற்றுள் சர்வஞ்ஞத்துவத்தை முற்றுமுணர்தலெனவும், திருத்தியை வரம்பிலின்பமுடைமை எனவும், அநாதி போதத்தை இயல்பாகவே பாசங்களினீங்குதல் எனவும், சுதந்திரத்துவத்தை தன்வயத்தனாதல் எனவும், அலுத்த சத்தியைப் பேரருளுடைமை எனவும், அனந்தசத்தியை முடிவிலாற்றலுடைமை எனவும், நிராமயான்மாவை இயற்கை உணர்வுடைமை எனவும், விசுத்ததேகத்தைத் தூய உடம்புடையனாதல் எனவுங் கூறுவர்.

ஆன்மாக்களையும், அவ்வான்மாக்களுக்கு வேண்டுவனவற்றையும் அறிதலின் முற்றுணர்வுடைமையும், அவ்வாறறிதல் தாம் இன்புறுதற்பொருட்டன்றி அவ்வுயிர்களுக்கு இன்பஞ்செய்தற் பொருட்டாகலின் வரம்பி லின்பமுடைமையும், மலத்தினின்றும் நீங்கிய ஆன்மா சிவனைச் சார்ந்தவிடத்துச் சிவமாய்நின்று வரம்பிலின்பமுடையதாய் விளங்குமாறுபோலாகாது, இயல்பாகவே வரம்பிலின்பமுடைமையின் இயல்பாகவே பாசங்களி னீங்குதலுடைமையும், இயல்பாகவே மலத்தின் வயப்படாமையின் தன்வயமுடைமையும், வரம்பில்லாத ஆன்மாக்களுக்கு அளவற்ற இன்பந்தருளுங் கிருபையுடைமையின் பேரருளுடைமையும், அளவற்ற ஆன்மாக்களுக்கு வேண்டியவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து அறிந்தவாறு செய்யும் வல்லமையுடைமையின் அளவிலாற்றலுடைமையும், இயல்பாகவே பாசங்களி னீங்குதலின் இயற்கையுணர்வுடைமையும் ஞானமே வடிவாதலின் தூயவுடம்புடைமையும் சிவபெருமானுக்கு இயல்பாயுள்ள குணங்களாம்.

திருநாவுக்கரசநாயனர்.

(திருத்தாண்டகம்—சு-ம்திருமுறை.)

நாவார நம்பனையே பாடப்பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப்பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர்நாத
னயனோடு மாற்கறி வரியவன லாய்நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந் தான்றென் றிசைக்கோன் றானேவந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங்
குணமாகக் கொள்ளோமெண் குணத்துளோமே.

ஒன்பதாநாள் உற்சவம்.

ஒன்பதாநாள்விழா மூன்றுருவும், முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இல்லையெனற்பொருட்டாகச் செய்யப்படுவது.

மூன்றுருவம்.

அவை: உருவம், அருவுருவம், அருவம் என்பன. அவற்றை ஆன்மா நீங்குதலாவது அதிகாரசிவத்தை அடைந்து உடற்பற்றைவிடுதலாகிய அதிகாரமுத்தியையும், போகசிவத்தை அடைந்து உலகப்பற்றைவிடுதலாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகமுத்தியையும், இலயசிவத்தை அடைந்து மலமாயா கன்மங்களைவிடுதலாகிய இலயமுத்தியையும் விடுதலாம்.

## முத்தொழில்.

சிருட்டி, திதி, சங்காரம் என்பன. ஆன்மா தனு கரண புவன போகங்களைப் பொருந்துதலும், அவற்றில் நிலைத்து நிற்றலும், அவற்றினின்று மாறுதலடைதலுமாம்.

## மூன்றிடத்துறைதல்.

சுவர்க்கம், மத்தியம், பாதாளங்களிற்சென்று வேதசரீரம், பூதசரீரம், யாதனாசரீரங்களை எடுத்து அவ்விடங்களில் வசித்து இன்பதுன்பங்களை அனுபவித்தலாம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

(திருக்குறுந்தொகை.)

அண்டர் வாழ்வு மமர ரிருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.

பதிஞான முதிர்ச்சியால் சுத்தவித்தை முதலிய தத்துவங்களை அடைந்த ஆன்மா பதி தரிசனத்தால் அருள்விளக்கத்தை அடைந்து, பிறப்பிறப்புக்களை நீங்கி, ஆண்டு நின்றபடியே சிவதரிசனத்தால் ஆனந்தவிளக்கம் அடையும்.

## பத்தாநாள் உற்சவம்.

பத்தாநாள்விழா அந்தமில் இன்பத்து அழிவில்லாத மோக்ஷமான பரமானந்தவெள்ளத்து அமிழ்ந்துதற்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பக்கச்சந்திரன் தனது ஒவ்வொருகலைகளால் ஒவ்வொருநாளும் கண்ணிற்கலந்துள்ள இருளைச் சிறிதுசிறிதாக நீக்கிப் பூரணையில் முற்றாக நீக்குவதுபோலச், சிவபெருமான் ஆன்மாக்களிடத்துள்ள மலசத்தியைச் சரியையிற் சரியைமுதற் பதினாறுவகைப்பட்ட சிவபுண்ணியங்களுக்கேற்ப, அவ்வப் பருவந்தோறும் சிறிதுசிறிதாக நீக்கி, நீங்குந்தோறும் நீங்குந்தோறும் நீக்குகின்ற திருவருட்சத்தியைச் சிறிதுசிறிதாகப் பதியச்செய்து, முதிர்ந்தபருவத்தில் முற்றாகநீக்கிச் சத்தியை, முற்றாய்ப் பதியச்செய்து, தாம் பிரிப்பின்றி நிற்றலை அறியவொட்டாதுசெய்த அஞ்ஞானத்தை நீக்கி அறியச்செய்து, காந்தமானது இரும்பைத் தன்வசமாக்கி ஒருகாலும்விடாத தன்மைபோல, ஆன்மாவைவிடாது தம்வசமாக்கி, உப்பானது நீரோடு கூடியவிடத்துத் தன்னிடத்துள்ள சுவை முழுதையும் அந்நீருக்காக்கி, அதனோடு மறைந்துநிற்குமாறுபோலத் தமது எண்குணங்களை ஆன்மாவிடத்து விளங்கச்செய்து, கலந்துநிற்பர். அணையினுள்ளாகக் கட்டுப்பட்டுத் தேங்கிநின்ற ஆற்றுநீர் அவ்வணையை முரித்து ஒருதடையுமின்றி விரைந்துசென்று கடல்நீருடன் கலந்து அடங்கி மீண்டு வாராத தன்மைபோலப் பாசஞானத்திலடங்கித் தடைப்பட்ட ஆன்மா அத்தடையினின்றும் நீங்கிச் சிவபெருமானுடைய திருவடியிற்கலந்து, அருள்நிறைவாயடங்கிப் பின்பு மீளுதலின்றிக் கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, அமுதம், கருக்கண்டு, சருக்கரை என்னுஞ் சுவைப்பொருள்களை ஒன்றாகக் கலந்தவிடத்து உண்டாகியசுவை இத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்தெனப் பிரித்தறியவராததுபோலப் பாமுத்தியில் இத்தன்மைத்தெனப் பிரித்தறியமுடியாத ஆனந்தசொரூபமாய் நிற்கும்.

கோடிக்கவி.

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வரிய தன்மையனை—நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி.

திருவாசகம்.

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

சண்டேஸ்வர உற்சவம்.

சண்டேஸ்வரப்பெருமானை முறைப்படி அபிஷேகஞ் செய்து, வஸ்திரம், ஆபரணம், கந்தம், மாலை முதலிய சிவநிர்மாலியங்களால் அலங்கரித்து நன்றாகப் பூசித்து, சிவிகை அல்லது கேடகத்தி லேற்றிக் குடை, சாமரம் முதலிய அலங்காரங்களுடன் வீதிப்பிரதக்கிணமாகத் தாங்கிவந்து அவருடைய தானத்தில் தாபித்து, உற்சவபலனைத் தருமாறு பிரார்த்திக்க. இவ்வுற்சவத்தை மனவுறுதியுடன் செய்பவர்களே சிவோற்சவ பலனை அடைவார்கள்.

சைவசமய நெறி.

சண்டனையர்ச் சித்தவரே சம்புவையர்ச் சித்தபலங்
கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவானைக்காப்புராணம் திருவிழாப்படலம்.

..............மூன்றுகாவருள்சேர்ந்திலகுசண்டேச
ஞானமகன்றமணிமுத்தினூர்திமிழலிலுவாப்போந்தான்.

## ஆசார்ய உற்சவம்.

உற்சவ ஆசாரியருடைய முன்னிலையை அடைந்து, இருகரங்களையுங் கூப்பி அஞ்சலிபண்ணிக்கொண்டு, சற்றே வளைந்து வாய்புதைத்துநின்று அருச்சிப்பதற்கு அனுமதி பெற்று "சிவாய" என்று ஆசனமிட்டு அதில் இருத்தி, சதாசிவமூர்த்தியாகப் பாவித்து, புட்பம், தூபம், தீபம் முதலியவற்றாற் பூசித்து வணங்கித் துதிக்க. பிறர் தம்மை அருச்சித்து வணங்கும்போது ஆசாரியர் அவ்வணக்கம் ஆன்மாவாகிய தமக்கென்று கருதாது தம்மிடத்து வேறற விருக்கும் சிவபெருமானுக்கேயாமென்று புத்திபண்ணுக. வணங்குபவரும் அவருக்கென்று கருதாமல் அவரிடத்து வேறறவிருக்கும் சிவபெருமானுக்கேயாமென்று புத்திபண்ணுக. பின்பு உடல், பொருள், ஆவி மூன்றையுங் கொண்டருளுக என்று இயன்ற தக்ஷிணைகொடுக்க. அத்தக்ஷிணையை ஆசாரியர்செய்தகிரியைக்குக் கூலியென்று நினையாது சீடர்களிடத்துள்ள மலத்தைச் சிவசத்தியே நீக்கவேண்டும் என்னுங் குறிப்பாகவே ஏற்றல்வேண்டும். பின் கோயிலதிகாரியும் மற்றையோரும் அவரைச் சிவிகையாதியவற்றிலொன்றிலேற்றி, குடை முதலிய மங்கலச்சிறப்புடன் நகரப்பிரதக்ஷணம் வரச்செய்து, அவரது மாளிகையில் விடுக. பின்னர்த் திருவருளாகிய விபூதிப்பிரசாதம் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அநுமதிப்படி தங்கள் தங்கள் இல்லங்களையடைந்து ஆசாரியபக்தி குன்றாதவர்களாய் இருக்க. சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சம்ஸ்கார தீக்ஷையினாலே வாகீஸ்வரர் வாகீஸ்வரிகளிடத்திருந்து தோன்றியவர்களாகையால் ஆசாரியரை மனிதரென்று கருதலாகாது. அவரை மனம், வாக்கு, காயங்களினாலே சிரத்தையுடன் வழிபடுவோர் போக மோக்ஷங்களைப் பெறுவர்.

### திருமந்திரம்.

தெளிவு குருவின் றிருமேனி காண்டல்
றெளிவு குருவின் றிருவார்த்தை கேட்டல்
றெளிவு குருவின் றிருநாமஞ் செப்பல்
றெளிவு குருவுருச் சிந்தித்த லானே.

திருநாவுக்கரசுநாயனார்.

(திருக்குறுந்தொகை ரு-ம்திருமுறை)

கொடிகொள் செல்வ விழாக்குண லையறாக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனார்
பொடிகள் பூசிய பூந்துருத் திந்நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | கரு | பதம் | பாதம் |
| ரு | ரு | அனுபம் | அனுபவம் |
| கசு | சு | முணிவர் | முனிவர் |
| உச | கச | இராட்சா | இரட்சா |
| உசு | கசு | பாயக்கினி | பர்யக்கினி |
| சரு | கச | ரூபாமாயும் | ரூபமாயும் |
| சஎ | கo | ஒப்பலே | ஒப்பவே |

பக்கம் உரு-ல் கடைசி 3 வரியையும், பக்கம் 26-ல் முதல் இரண்டு வரியையும் நீக்கி வாசிக்க.

10988 S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org